


# Ball Corporation
# வணிக நெறிமுறை நடத்தை விதிகள்

# ஜான் ஏ. ஹேய்ஸ் (JOHN A. HAYES) வழங்கியுள்ள செய்தி

அன்பார்ந்த சக ஊழியர்களே:

Ball-இல், சமரசத்துக்கு இடமில்லாத ஒருமைப்பாடு சார்ந்து நமது நிலையான அர்ப்பணிப்பே நம் நிறுவனத்தின் ஒவ்வொரு நிலையிலும் மற்றும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் நம் வணிகத்தை மேற்கொள்ளும் முறையை வரையறுப்பதாக நாங்கள் நம்புகிறோம். நம் இணக்கத்தின் கலாச்சாரத்தைப் பராமரிக்க நம் மக்கள் தினமும் செய்யும் பணிக்காக நாம் பெருமிதம் கொள்கிறோம், இது நம் நிறுவனத்திற்காக நாம் கூட்டாக முதலீடு செய்யும் நேரத்தையும் சக்தியையும் பாதுகாக்கிறது.

நம்பிக்கை மற்றும் ஒருமைப்பாட்டின் கொள்கைகளினால் கட்டமைக்கப்பட்ட 140 ஆண்டுகால மரபுடன், நாம் நமது வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள் மற்றும் உலகளாவிய சமூகங்களின் தேவைகளை மிகவும் நேர்மையான வழிகளில் வழங்க தொடர்ந்து அர்ப்பணிப்பைப் பேணி வருகிறோம். நாம் திட்டத்தைத் திட்டி முன்னேறுகையில், சரியான வழிகளில் முன்னேறி செல்ல வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது நாம் முடிவெடுப்பதற்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள நமது வணிக நெறிமுறை நடத்தை விதிகளைக் காண உங்களை வரவேற்கிறேன். நமக்காகக் காத்திருக்கும் சிறந்த எதிர்காலத்தை நோக்கி குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை மேற்கொள்ளும் வேளையில், முறையாகப் பணியாற்றுவது மற்றும் நேர்மையோடு முன்னேறுவதே நமது சிறப்புமிக்க மரபுக்குப் பெருமை சேர்க்கும் என்ற நமது நம்பிக்கையை இந்த நெறிமுறைகள் பிரதிபலிக்கின்றன.

நம் அனைவருக்கும் தகவல் அளிக்கப் பயனுள்ள ஆதாரங்களாகவும் நம்மை ஊக்குவிக்கும் வகையிலும் அவ்வப்போது புதுப்பிப்புகளைப் பகிர்வதற்கு நமது இணக்க உடன்பாட்டுக் குழு உறுதிபூண்டுள்ளது. இதற்கிடையில், நீங்கள் இந்த நெறிமுறைகளைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள், மேலும் இணக்க நடவடிக்கை சார்ந்து செயல்திறத்துடன் பங்கேற்க உங்களை ஊக்குவிக்கிறோம் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். நமது நிறுவனத்தின் உணர்வை முழுமையாகப் பிரதிபலிக்காத நடத்தைகளை நீங்கள் காண நேர்ந்தால் அல்லது அறிந்தால், முன்வந்துப் பேசுங்கள்!

நமது வெற்றியைக் கட்டியெழுப்ப அடித்தளமாக விளங்கி ஆர்வத்தோடும் ஒருமைப்பாட்டுடனும் செயல்படும் திறமையானவர்களுக்கான இல்லமாக Ball திகழ்கிறது. இப்போதும் எப்போதும் முறையாகப் பணியாற்றி சிறப்பான முறையில் தொடர்ந்து வெற்றியை நோக்கிப் பயணிப்போம்.

ஜான் ஏ. ஹயேஸ் (JOHN A. HAYES)
சரேர்மன், தலவைர் மற்றும்
தலமைை நிர்வாக அதிகாரி



# இணக்க உடன்பாட்டுக் குழு வழங்கியுள்ள செய்தி

Ball இல், ஒவ்வொரு நாளும் சரியானதைச் செய்வதே நம் நிறுவனத்தின் கலாச்சாரத்தை வரையறுப்பதாக நம்புகிறோம். சரியானதைச் செய்வது என்பது உரிமையாளர்களைப் போல நடந்துகொண்டு நமது முடிவுகள் நம் நிறுவனத்தைப் பாதிக்கும் என்பதை அறிந்து நடந்துகொள்வதாகும். நாம் விதிகளை மட்டுமே பின்பற்றாமல், நேர்மையுடனும் செயல்பட வேண்டும். சரியானதைச் செய்வது என்பது நம் ஒவ்வொருவரிடமிருந்தும் தொடங்குகிறது மற்றும் அது அனைவரது பொறுப்பாகும்.

Ball-இன் ஒருமைப்பாட்டுத் தரத்தைப் பராமரிப்பதில் நாம் அனைவரும் பங்குதாரர்களாக உள்ளோம். மேலும் உங்களுக்கு கேள்விகள் இருந்தால் அல்லது இணக்கம் சார்ந்து ஏதேனும் கருத்து தெரிவிக்க விரும்பினால் அதைக் கேட்டறியத் தயாராக உள்ளது. ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் மற்றும் பிரிவிற்கும் ஒரு நியமிக்கப்பட்ட நட்பு அல்லது **இணக்கக் மையப் புள்ளி** உள்ளது, இது வணிக நெறிமுறை மற்றும் இணக்கம் சார்ந்த வழிகாட்டுதலை வழங்கத் தயாராக உள்ளது. நீங்கள் எப்போது வேண்டுமானாலும் கொலராடோவில் உள்ள இணக்க உடன்பாட்டுக் குழுவைத் தொடர்பு கொள்ளலாம் (compliancealliance@ball.com). இணக்க உடன்பாட்டுக் குழுவை நடத்தை விதிகளின் பராமரிப்பாளராகப் பாருங்கள்: இது நீங்கள் தெளிவாக அறிந்திராத பகுதிகளில் உங்களை வழிநடத்திச் செல்லும் வளம்!

நமது கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், இணக்க ஹாட்லைன் மற்றும் Ballநிறுவனத்தின் பணியாளர்களிடம் எதிர்பார்க்கப்படுபவை போன்ற விஷயங்களைப் பற்றிய முக்கியமான தகவல்களை இந்த நெறிமுறை உங்களுக்கு வழங்குகிறது.


வளங்களைப் பற்றிய கூடுதல் தகவலுக்கு வளங்கள் பிரிவைப் பார்க்கவும் அல்லது BallConnect-இல் **இணக்க உடன்பாடு** பக்கத்தைப் பார்க்கவும்.

COMPLIANCE ALLIANCE

▸ *Starts with YOU*

# நாம் யார்

நமது செழிப்பான வரலாறு குறித்து பெருமிதம் கொள்கிறோம், நமது நிறுவனம் புதுமை, குழுப்பணி மற்றும் முதன்மைநிலை அடைவதில் துணியாத நாட்டம் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. நமது 10 வழிகாட்டும் கொள்கைகள் சார்ந்த நமது செயலூக்கத்திற்கு ஒத்த வகையில் நமது வாடிக்கையாளர்களுக்கு அளவிடக்கூடிய மதிப்பை வழங்க நம் மக்கள் ஒன்றிணைகிறார்கள். நாம் சமரசமில்லாத நேர்மையுடன் செயல்படுகிறோம், எப்போதும் முறையானதை முறையான வழியில் செய்வதை நாடுகிறோம். சிந்தனையின் பன்முகத்தன்மையைத் தழுவவும் அனைத்துப் பணியாளர்களும் ஒன்றுபட்ட ஒரு பணியிடத்தை உருவாக்கவும் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு நமது “ஒன்றிணைந்த Balll” தொலைநோக்குப் பார்வை மற்றும் சாதகமான மாற்றத்தை உண்டாக்கும் நமது திறனுக்கு உரமிடுகிறது.



## சமரசமில்லாத நேர்மை

நாம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோமோ, அவ்வாறே மற்றவர்களையும் நடத்துகிறோம், அவ்வாறு செய்கையில், நமது நெறிமுறை சார்ந்த நடத்தையின் நற்பெயரையும் பேணுகிறோம்.

## நம் வாடிக்கையாளர்களுடன் நெருங்கிய உறவு

நமது வாடிக்கையாளர்களுடன் நம்மை நெருக்கமாகக் கொண்டு செல்லும் வகையில் செயல்பட நாம் கடமைப்பட்டுள்ளோம். புதுமையானதை உருவாக்கவும் சவால்களுக்கு தீர்வு காணவும் வாடிக்கையாளர்களுடன் நமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்து ஒரு அணியாகப் பணியாற்றுகிறோம்.

## உரிமையாளர்களைப் போல செயல்படுதல்

நமது வணிகத்தின் உண்மையான உரிமையாளர்கள் போல நடந்துகொண்டும் நமது நீண்ட-கால வெற்றியில் ஆழ்ந்த ஆர்வத்தோடு, நாம் - “ஒரே Ball” ஆக- சிறப்பான முடிவுகளை வழங்குகிறோம்.

## முழுமை மற்றும் துல்லியத்தின் மீது கவனம் செலுத்துதல்

நமது செயல்பாடுகளை முழுமையாகவும் துல்லியமாகவும் நிறைவேற்ற இடைவிடாத கவனம் கொள்வதன் மூலம், நமது பங்குதாரர்கள் அனைவருக்கும் முதன்மையான மதிப்பை தொடர்ந்து வழங்கும் வகையில் Ball-ஐ நிலைநிறுத்துகிறோம்.

## புதுமையை நாடுதல்

நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு வழியாக நம் நிலையான கடமைகளில் கவனம் செலுத்தும் அதே வேளையில், நமது செயல்முறைகள், நமது தயாரிப்புகள் மற்றும் நாம் வாடிக்கையாளர்களுடன் வணிகம் செய்யும் விதம் ஆகியவற்றில் புதுமையோடு விளங்க முயற்சி செய்கிறோம்.

# பொருளடக்க அட்டவணை




ஜான் ஏ. ஹேய்ஸ் (JOHN A. HAYES) இடமிருந்து செய்தி i

இணக்க உடன்பாட்டுக் குழுவிடம் இருந்து செய்தி ii

நாம் யார் iii

அறிமுகம் 1
- நோக்கம்
- பொருந்துந்தன்மை
- என்ன செய்வதென்று தெரியவில்லையா? இந்த வினாடி வினாவில் பங்கு பெறுங்கள்

நம் எதிர்பார்ப்புகள் 3
- நம் பொறுப்புகளைப் புரிந்துகொள்ளுதல்
- மேலாளர்களுக்கான கூடுதல் பொறுப்புகள்
- இணக்கமின்மையின் விலை

நாம் கொண்டுள்ள கேள்விகள் மற்றும் கவலைகளை நிவர்த்தி செய்தல் 5
- இணக்கம் குறித்த கவலைகளைத் தெரிவித்தல் மற்றும் கேள்விகளைக் கேட்டல்
- ஹாட்லைன் வளங்கள்
- இணக்கம் குறித்த புகார்களை விசாரித்தல்
- எதிரடி கொடுத்தலைத் தடுத்தல்

ஒருவரையொருவர் மதித்தல் 9
- வேற்றுமை உணர்வைத் தவிர்த்தல்
- தொல்லை கொடுப்பதைத் தடுத்தல்
- தரவைத் தனிப்பட்டதாகப் பராமரித்தல்
- ஊதியம் மற்றும் குழந்தைத் தொழிலாளர் சட்டங்களுக்கு இணங்குதல்
- பணியிடப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்
  - பணியிடத்தில் வன்முறை மற்றும் ஆயுதங்களைத் தடை செய்தல்
  - போதைப்பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல்

நம் நிறுவனத்தைப் பாதுகாத்தல் 13
- ஆர்வ முரண்பாடுகளைத் தவிர்த்தல்
- கணக்கு வழக்குகள் மற்றும் பதிவுகளைத் துல்லியமாக வைத்திருத்தல்
- அரசாங்கத் தணிக்கைகள், விசாரணைகள் மற்றும் புலனாய்வுக்குப் பதிலளித்தல்
- நம் நிறுவனத் தகவல்களைப் பாதுகாத்தல
  - விஷயம் அறிந்தவரது தவறான செயல்பாடுகளைத் தடுத்தல்
  - அறிவுசார் சொத்து மற்றும் நிறுவனத்திற்கு நம்பகமான தகவல்களைப் பாதுகாத்தல்
  - புறச் சொத்துக்களைப் பாதுகாத்தல்
  - தகவலைப் பாதுகாத்தல்
  - சமூக ஊடகத்தைப் பயன்படுத்தல்
  - முதலீட்டாளர்கள், ஊடகங்கள் மற்றும் ஆர்வக் குழுக்களுடன் தொடர்புகொள்ளுதல்

நமது வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் பிற வணிக கூட்டாளர்களுடன் தொடர்புகொள்ளுதல் 20
- பரிசுகள் மற்றும் பணிக்கொடைகளை வழங்குதல் மற்றும் பெறுதல்
- லஞ்சம் மற்றும் ஊழலைத் தவிர்த்தல்
- நியாயமான முறையில் வணிகத்தை நடத்துதல்
  - நியாயமான போட்டி
- நியாயமாகக் கையாளுதல் மற்றும் சந்தைப்படுத்தல் நடைமுறைகள்
- தயாரிப்பின் தரம்

நம் சமூகங்களை ஆதரித்தல் 25
- சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்
- சமூகத்துடன் ஈடுபடுதல்
  - நிலைத்தன்மை
  - தொண்டு நிறுவனங்கள்
- அரசியல் நடவடிக்கைகளில் பொறுப்புடன் பங்கேற்றல்
- பொருளாதார மற்றும் வர்த்தகத் தடைகளுக்கு இணங்குதல்
- பண மோசடியைத் தவிர்த்தல்
- வணிக நுண்ணறிவை நியாயமான முறையில் உருவாக்குதல்
- உரிமை விட்டுக் கொடுப்புகளை வெளிப்படுத்தல்

கூடுதல் வளங்கள் 30



# அறிமுகம்

உலகெங்கும் நாம் எதிர்கொள்ளும் அன்றாட வணிகச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நம் நிறுவனத்தின் கோட்பாடுகளைப் பயன்படுத்த நமக்கு உதவுவதற்காக Ball-இன் வணிக நெறிமுறை நடத்தை விதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. உயர்ந்த நெறிமுறை தரங்களுடனும் பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நிறுவனக் கொள்கைகளுக்கு இணங்கியும் வணிகத்தை மேற்கொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம். Ball-இல், இணக்கம் என்பது சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதை விடவும் மேலானது; இது வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள், நமது சமூகங்கள் மற்றும் நமது அனைத்து பங்குதாரர் குடும்பத்தினருடனும் நமது பணி சார்ந்து நாம் எவ்வாறு அணுகுகிறோம் என்பதைக் குறிக்கிறது.

## நோக்கம்

பொதுவான இணக்கச் சிக்கல்களைக் கண்டறிந்து, நாம் அனைவரும் சரியான முடிவுகளை எடுப்பதற்கு உதவ வழிகாட்டுதலையும் வளங்களையும் வழங்குவதற்காக இந்த நெறிமுறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், நாம் எதிர்கொள்ளக்கூடிய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் விதிகளைக் கொண்டு தீர்வளிக்க முடியாது. எனவே, விதிகளைப் பற்றி அல்லது வணிக நெறிமுறைகள் சார்ந்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் மேலாளர், உங்கள் மனிதவளத்துறை பிரதிநிதி அல்லது இணக்க உடன்பாட்டுக் குழுவைத் தொடர்பு கொள்ளுங்கள்.

நமது விதிகள் மற்றும் கொள்கைகளை நாம் பின்பற்றுவது Ball-இன் தொடர் வெற்றிக்கு முக்கியமாகும். நமது நிறுவனத்தின் நற்பெயர் நாம் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளும் செயல்களையும் முடிவுகளையும் சார்ந்துள்ளது. நெறிமுறையுடனும் சட்டப்பூர்வமாகவும் செயல்பட நம்மால் முடிந்த அனைத்தையும் மேற்கொள்வதன் மூலம், நமது பங்குதாரர்களின் நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் ஊக்குவிக்கும் நிலையில் நம்மை நிலைநிறுத்துகிறோம்.

Ball ஊழியர்களாக, நமது வணிக விவகாரங்கள் அனைத்தையும் உயர்ந்த நெறிமுறைத் தரங்களைப் பின்பற்றி மேற்கொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம்.

# பொருந்துந்தன்மை

Ball Corporation மற்றும் அதன் பிரிவுகள், துறைகள் மற்றும் துணை நிறுவனங்கள் மற்றும் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான கூட்டு நிறுவனங்களுக்கும் இவ்விதிகள் பொருந்தும். Ball-இன் உரிமைத்துவ சதவீதம் எதுவாக இருப்பினும், எந்தவொரு கூட்டு நிறுவனத்திற்கும் பரிந்துரைக்கப்படும் எந்த Ball ஊழியருக்கும் இந்த விதிகள் பொருந்தும். மேலும், சப்ளையர்கள் மற்றும் முகவர்கள் உட்பட அனைத்து Ball வணிகக் கூட்டாளர்களையும் விதிகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கொள்கைகளைப் பின்பற்ற அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

## என்ன செய்வதென்று தெரியவில்லையா? இந்த வினாடி வினாவில் பங்கு பெறுங்கள்

அனைத்து ஊழியர்களும் தங்களது சிறந்த பகுத்துணர்வைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் Ball-இன் வணிக விவகாரங்களை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு மற்றும் நெறிமுறைப்படி மேற்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நீங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் அல்லது நடந்துகொள்ள வேண்டும் என்று நிச்சயமாகத் தெரியாத நிலை ஏற்பட்டால் பின்வரும் கேள்விகளை உங்களுக்கு நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:

**இது சட்டப்பூர்வமானதா?**

| ஆம்: தொடர்க | இல்லை: நிறுத்து |
|---|---|

**இது நமது நடத்தை விதிகள் மற்றும் கொள்கைகளுடன் ஒத்திருக்கிறதா?**

| ஆம்: தொடர்க | இல்லை: நிறுத்து |
|---|---|

**இது எவ்வாறு தோன்றும் -- என் முடிவிற்கு என்னால் வழக்காட முடியுமா?**

| ஆம்: தொடர்க | இல்லை: நிறுத்து |
|---|---|

**இது சரி எனத் தோன்றுகிறதா? மற்றவர்கள் இதை அறிய வரும்போது நான் சௌகரியமான உணர்வேனா?**

| ஆம்: தொடர்க | இல்லை: நிறுத்து |
|---|---|

அனைத்துக் கேள்விகளுக்கும் தெளிவாக "ஆம்" என்று பதிலளிக்கும் நிலையில் நீங்கள் இருக்கவேண்டும். அவ்வாறு செய்ய முடியவில்லை என்றால், இச்செயலில் மேற்கொண்டு தொடரும் முன்னர் உங்கள் மேலாளர், உங்கள் மனிதவளத்துறை அல்லது இணக்க உடன்பாட்டுக் குழுவுடன் கலந்தாலோசிக்கவும். உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றால், வழிகாட்டுதலை நாடுங்கள்.

பிரச்சனையை அறிய நேர்ந்தால் கேளுங்கள். உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றால், கேளுங்கள்.





# நம் எதிர்பார்ப்புகள்

## நம் பொறுப்புகளைப் புரிந்துகொள்ளுதல்

நாம் எங்கு பணியாற்றுகிறோம் அல்லது என்ன செய்கிறோம் என்பது முக்கியமல்ல - Ball நிறுவனத்தின் பணியாளர்கள் என்ற முறையில், நாம் அனைவரும் வாடிக்கையாளரின் தேவைகள் மற்றும் தொழில்முறைத் தரங்களைச் சந்திக்க நம் திறமைகளையும் திறன்களையும் பயன்படுத்த வேண்டும் என்பது மட்டுமின்றி, நம் நடத்தை மற்றும் வேலைத் தயாரிப்புகள் பொருந்தும் சட்ட மற்றும் நெறிமுறை தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிபடுத்தும் விதத்திலும் நாம் பணியாற்ற வேண்டும். விதிகள், நிறுவனக் கொள்கைகள் மற்றும் பொருந்தும் சட்டத் தேவைகளைப் படித்து, புரிந்துகொண்டு, இணங்குவதன் மூலம் நாம் இதனைச் செய்கிறோம்.

மேலும் தகவலுக்கு **BallConnect**-இல் Ball-ன் கொள்கைகளைக் காணுங்கள்.

## மேலாளர்களுக்கான கூடுதல் பொறுப்புகள்

கார்ப்பரேட் இணக்கத்தைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது என்றாலும், மேலாளர்களுக்கு தங்கள் தாக்கம் உள்ள பகுதிகளுக்குள் இணக்கத்தைப் பராமரித்து, ஓர் உதாரணமாக வழிநடக்க வேண்டிய கூடுதல் பொறுப்புகளும் உள்ளது. மேலாளர்கள் வணிக நடத்தையின் மிக உயர்ந்த தரத்தை நிர்ணயித்து விதியுடன் இணங்கி நடக்க உதாரணமாக விளங்கவேண்டும். இதோடு, மற்றவர்களிடையே இணக்கம் மற்றும் தனிப்பட்ட பொறுப்புணர்வை ஊக்குவிப்பது மற்றும் அவர்களது கேள்விகள் மற்றும் கவலைகளுக்கு பதிலளிப்பது போன்றவற்றிலும் மேலாளர்கள் கவனம் கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீங்கள் மேலாளர்களாக இருந்தால், நமது கொள்கைகளை நன்கு அறிந்து பின்வரும் தலைப்புகளைப் பற்றி உங்கள் குழுக்களுக்கு தகவல் அளிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறீர்கள்:

- உங்கள் ஊழியர்கள் கார்ப்பரேட் இணக்கத்தைப் புரிந்துகொண்டு பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளதையும் நேர்மையுடன் செயல்படுவதையும் உறுதிசெய்தல்.
- உங்கள் கீழ் நேரடியாகப் பணியாற்றுவோர் மற்றும் பிற ஊழியர்கள் கேள்விகளைக் எழுப்பவும், தங்கள் கவலைகள் குறித்து கலந்தாலோசிக்கவும் மற்றும் தவறான நடத்தைகளைப் பற்றிப் புகாரளிக்கவும் உகந்த சூழலை உருவாக்குதல்.
- தவறான நடத்தை அல்லது மீறல்களைப் புகாரளிக்க கிடைக்கும் வளங்கள் குறித்தும் நம்பிக்கையோடு புகார் அளிக்கும் நபர்களுக்கு பதிலடி கொடுப்பதற்கு எதிரான Ball-ன் தடைகள் குறித்தும் உங்கள் ஊழியர்கள் அறிந்திருப்பதை உறுதிசெய்தல்.

# இணக்கமின்மையின் விலை

விதிகள், நம் கொள்கைகள் அல்லது பொருந்தும் சட்டத் தேவைகள் ஆகியவற்றை மீறுவது அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் நமது நிறுவனத்திற்கும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். தங்களது ஒருமைப்பாட்டு பொறுப்புகளை நிறைவேற்றாத ஊழியர்கள் மற்றும் தலைவர்கள் மீது வேலையில் இருந்து நீக்கப்படுவது உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வாய்ப்புள்ளது. மீறல்கள் தனிநபர்களையும் நம் நிறுவனத்தையும் சிவில் அல்லது குற்றவியல் பொறுப்பு, நற்பெயர்களுக்கு சேதம் விளைவிப்பது மற்றும் அபராதம் ஆகியவற்றிற்கு உட்படுத்தும். விதிகளை மீறுவதால் ஏற்படும் விளைவுகள் அனைத்துப் பிரிவுகள், துறைகள் மற்றும் துணை நிறுவனங்களின் ஊழியர்கள் உட்பட Ball நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் மற்றும் கூட்டு நிறுவனத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கும் பொருந்தும்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **கார்ப்பரேட் இணக்கக் கொள்கையை** பாருங்கள்.





# நம் கேள்விகள் மற்றும் கவலைகளை நிவர்த்தி செய்தல்

## இணக்கம் குறித்த கவலைகளைத் தெரிவித்தல் மற்றும் கேள்விகளைக் கேட்டல்

தவறான நடத்தை அல்லது விதிகள், Ball கொள்கைகள் அல்லது மீறப்படுதல் போன்றவற்றை நீங்கள் உணர்ந்தால் அல்லது கார்ப்பரேட் இணக்கம் குறித்து ஏதேனும் கேள்வி இருந்தால், உங்கள் மேலாளர், உங்கள் மனிதவளத்துறை அல்லது இணக்க உடன்பாட்டுக் குழுவுடன் கலந்தாலோசியுங்கள்.

உள்ளூர் சட்டம் அனுமதிக்கும் இடங்களில், புகாரளிகையில் உங்களை அடையாளப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. உங்களை நீங்களே அடையாளப்படுத்த விரும்பினால், அதை ரகசியமாகக் கையாளப்படக் கோரலாம் மற்றும் முடிந்தவரையில் உங்கள் அடையாளம் ரகசியமாகப் பாதுகாக்கப்படும். உள்ளூர் சட்டத் தேவைகளின் கீழ் முடிந்த அளவிற்கு அறிக்கைகள் மற்றும் புகார்கள் ரகசியமாக வைக்கப்படும்.

உங்களது குறிப்பிட்ட பிராந்தியம் அல்லது பிரிவில், Ball-இன் கார்ப்பரேட் கொள்கைகள் மற்றும் விதிகளை வலுப்படுத்த உதவியாக நெறிமுறை விதிகள் மற்றும் கையேடுகள் உள்ளிட்ட கூடுதல் கொள்கைகள் இருக்கலாம். உங்கள் பிராந்தியம் அல்லது பிரிவின் கொள்கைகளை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **கார்ப்பரேட் இணக்கக் கொள்கையை** பாருங்கள்.

# ஹாட்லைன் வளங்கள்

உங்கள் கவலைகளைத் தெரிவிக்க, கீழேயுள்ள சேனல்களில் ஒன்றைப் பயன்படுத்தவும் அல்லது கூடுதல் தகவல் மற்றும் உள்ளூர் கட்டணமில்லா எண்களுக்கு இந்த விதிகளில் உள்ள வளங்கள் பிரிவைப் பார்க்கவும். ஹாட்லைன் ஒரு சுயாதீனமான மூன்றாம் தரப்பினரால் இயக்கப்படுகிறது மற்றும் இது நாளின் 24 மணி நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் கிடைக்கிறது.


முன்வந்து பேசுங்கள்! Ball-இன் நெறிமுறையான கலாச்சாரம் மற்றும் வெற்றியைப் பாதுகாக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

ஆன்லைனில் புகாரைச் சமர்ப்பிக்கவும், உள்ளூர் கட்டணமில்லா எண்களை அணுகவும், ballcompliancehotline.com-க்குச் செல்லவும்

Ball – கார்ப்பரேட் மற்றும் பேக்கேஜிங் (U.S. மட்டும்): **1-800-270-2879**

Ball Aerospace: **1-303-939-6777** அல்லது ethicshotline@ball.com

உங்கள் உள்ளூர் ஹாட்லைன் எண்ணிற்கு, இந்த ஆவணத்தில் கடைசியில் உள்ள **கூடுதல் வளங்களைப்** பார்க்கவும்.



# இணக்கம் குறித்த புகார்களை விசாரித்தல்

நிறுவனத்தின் எந்தவொரு இணக்கம் தொடர்பான விசாரணையிலும் அனைவரும் முழுமையாக ஒத்துழைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். Ball-இன் நடைமுறைகளுக்கு ஏற்ப விசாரணைகள் நடத்தப்படும். நமது விசாரணை செயல்முறையானது குறிப்பிடப்பட்டுள்ள கவலைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் அனைத்துப் புகார்களையும் கவனமாக மதிப்பாய்வு செய்வதை உறுதி செய்கிறது. ஒரு விசாரணையில் உதவுமாறு கேட்கப்படும்போது, விசாரணைக்கு பொருத்தமான எந்தவொரு மற்றும் அனைத்து தகவல்களையும் நாம் நேர்மையோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். கூடுதலாக, விசாரணையின் விளைவைத் தடுக்கும் அல்லது பாதிக்கும் வகையில் நாம் செயல்படக்கூடாது. ஒரு விசாரணையில் பங்கேற்கும்போது, நம்பகத்தன்மை மற்றும் விசாரணை தொடர்பான தகவல்களை வெளியிடுவதைக் கட்டுப்படுத்துவது போன்றவை தொடர்பாக புலனாய்வாளர் அளிக்கும் அறிவுறுத்தல்களை நாம் பின்பற்ற வேண்டும்.

## மனதில் வைத்துக் கொள்ளுங்கள்

- Ball கொள்கைகளை மீறும் நடத்தை தொடர்பான கவலைகளைச் சமர்ப்பிக்கும் போது, நீங்கள் அதனை நல்லெண்ணத்துடன் செய்ய வேண்டும்.
- எழுதப்பட்ட அறிக்கைகள், படங்கள் மற்றும் பிற தகவல்தொடர்புகள் போன்ற, கொள்கை மீறல் நிகழ்ந்திருப்பதைத் தீர்மானிப்பதற்கு புலனாய்வாளர்களுக்கு உதவும் எந்தத் தகவலையும் சமர்ப்பிக்கவும்.
- கூடுதல் ஆதாரம் ஏதுமின்றி வதந்தியின் அடிப்படையில் கவலையைத் தெரிவிப்பது அனுமதிக்கப்படுகிறது என்றாலும், கவலையைச் சமர்ப்பிக்கும் முன் வதந்தியின் உண்மைத்தன்மையைத் தீர்மானிக்க தகவல்களையும் சூழ்நிலைகளையும் கவனமாகப் பரிசீலிக்குமாறு ஊழியர்களுக்கு பரிந்துரைக்கிறோம். வதந்தி உண்மையானதாக இருப்பதற்கு சாத்தியமுள்ளதா என்பதைத் தீர்மானிக்க வதந்தி சம்பந்தமான கேள்விகளை வதந்தியைப் பரப்புவரிடம் கேட்பதும் இதில் அடங்கும்.
- ஒரு கவலையைச் சமர்ப்பிக்கும் போது, உள்ளூர் சட்டங்கள் அனுமதித்தால் நீங்கள் அநாமதேயமாக அதை எழுப்ப முடியும். நீங்கள் உங்களை அடையாளம் காணத் தேர்வுசெய்தால், உள்ளூர் சட்டத் தேவைகளால் தேவைப்பட்டால் மட்டுமே அல்லது உங்கள் அடையாளம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று நீங்கள் குறிப்பாகக் கோரியிருந்தால் மட்டுமே உங்கள் அடையாளம் வெளியிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை Ball மேற்கொள்ளும்.

### தெரிந்துகொள்வது நல்லது

*"நல்லெண்ண அறிக்கை" என்பது கொள்கை மீறலாகக் கருதப்படக்கூடிய ஏதேனும் நிகழ்ந்ததாக நம்புவதற்கு நியாயமான அடிப்படையை வழங்கும் தகவல் உங்களிடம் உள்ளது - அது உங்கள் சொந்த தனிப்பட்ட அறிவாக இருக்கலாம் அல்லது மற்றவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களாக இருக்கலாம்.*




## எதிரடி கொடுத்தலைத் தடுத்தல்

நமது நெறிமுறைக் கலாச்சாரத்தைப் பராமரிக்க, வெளிப்படையான தகவல்தொடர்பையும் சரியான நேரத்தில் புகார் அளிப்பதையும் ஊக்குவிக்கிறோம். நல்லெண்ணத்தோடு கவலைகளை எழுப்புபவர்களுக்கு எதிராக எந்த விதமான எதிரடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதற்கு எதிராக Ball கடுமையான கொள்கையைக் கொண்டுள்ளது. ஒருவர் நல்லெண்ணத்தோடு புகாரைச் சமர்ப்பித்ததற்காக, விசாரணையில் பங்கேற்றதற்காக அல்லது Ball-ன் கொள்கைகள் மற்றும் நெறிமுறை விதிகளை மீறியதற்கு ஒருவரைத் தடுக்க முயன்றதற்காக பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை நம் நிறுவனம் தடைசெய்கிறது மற்றும் பதவி விலக்கு, பதவி இறக்குதல் அல்லது இடைநீக்கம் போன்ற அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட ஆனால் இவை மட்டுமே அல்லாமல் பிற தண்டனைகள் மூலம் ஒழுங்குபடுத்துகிறது.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **எதிரடி நடவடிக்கையைத் தடுத்தல் கொள்கையைப்** பாருங்கள்.

நல்லெண்ண அடிப்படையில் செய்யப்பட்ட புகாருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எவ்விதமான பதிலடியையும் நம் நிறுவனம் கண்டனம் செய்கிறது.





# ஒருவரையொருவர் மதித்தல்

நமது மக்கள் மற்றும் கலாச்சாரத்தின் மீதான நம் கவனத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு ஊழியருக்கும் தனித்துவமான குணங்கள், மதிப்புகள் மற்றும் திறன்களை வழங்கும் ஓர் உள்ளடக்கிய பணியிடச் சூழலை வழங்க நாம் கடமைப்பட்டுள்ளோம். மாறுபட்ட கண்ணோட்டங்கள், அனுபவங்கள் மற்றும் நாட்டங்களைப் பயன்படுத்துவது யோசனைகளை வெளிக்கொண்டு வரவும் மற்றும் புதுமைகளைத் தூண்டவும் உதவுகிறது, இது நமது உலகளாவிய அமைப்பு முழுவதும் வளர்ச்சியையும் மதிப்பையும் இயக்குகிறது.

## வேற்றுமை உணர்வைத் தவிர்த்தல்

திறமையான மற்றும் மாறுபட்ட தொழிலாளர்களை ஈர்க்கும் மற்றும் தக்க வைத்துக் கொள்ளும் ஓர் உள்ளடக்கிய பணிச்சூழலைப் பராமரிக்க நம் நிறுவனம் உறுதிபூண்டுள்ளது. ஒரு நேர்மறையான சூழலை நிறுவுவதில் நம் வெற்றியை உறுதிப்படுத்த, Ball எந்த விதமான பாகுபாட்டையும் தடை செய்கிறது.

பொதுவாக, வேற்றுமை உணர்வு என்பது ஒரு பாதுகாக்கப்பட்ட பண்பு காரணமாக ஒருவரைத் தனது வேலை தொடர்பாக மிகுதியாகவோ அல்லது குறைவாகவோ நடத்தும் நடைமுறையாகும். வர்க்கம், பாலினம், இனம், நிறம், வயது மற்றும் பொருந்தும் சட்டத் தேவைகள் அல்லது குறிப்பிட்ட கார்ப்பரேட் கொள்கையால் பாதுகாக்கப்பட்ட பிற பண்புகள் ஆகியவை பாதுகாக்கப்பட்ட பண்புகளில் அடங்கும்.

எந்தவித பாதுகாக்கப்பட்ட பண்புகளையும் பொருட்படுத்தாது மிகவும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு வேலைவாய்ப்பு, இடமாற்றம், பதவி உயர்வு, இழப்பீடு மற்றும் பிற முன்னேற்ற வாய்ப்புகளை Ball வழங்குகிறது.

## தொல்லை கொடுப்பதைத் தடுத்தல்

தொல்லைகள் இல்லாத பணியிடத்தைப் பராமரிக்க Ball உறுதிபூண்டுள்ளது. தொல்லை அளித்தல் என்பது மிரட்டுகிற, எதிர்க்கின்ற அல்லது அவமதிப்பான வேலை சூழலை உருவாக்கும் அல்லது ஒரு தனிநபரின் பணிச் செயல்திறனில் நேர்மையற்ற முறையில் தலையிடும் நடத்தை ஆகும். தொல்லை அளித்தலில் பல வடிவங்கள் உள்ளன, அவற்றில் அடங்குபவை:

- அவமதிக்கும் கருத்துக்கள்
- விரும்பத்தகாத பாலியல் தொல்லைகள்
- கேவலமான, இழிவான அல்லது ஒருவரைக் குறிக்கும் நகைச்சுவைகள், மின்னஞ்சல்கள் அல்லது நடத்தை

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **பணியிடத்தை மதித்தல் கொள்கை** மற்றும் வேற்றுமை உணர்வைத் தவிர்கும் மற்ற பகுதி சார்ந்த கொள்கைகளையும் பாருங்கள்.

## தரவைத் தனிப்பட்டதாகப் பராமரித்தல்

நம்முடன் பணிபுரியும் அனைத்து தனிநபர்களின் தனிப்பட்ட தகவல்களையும் பாதுகாக்க Ball உறுதிபூண்டுள்ளது. இதில் ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதும் அடங்கும். அங்கீகாரமின்றி நாம் ஒருபோதும் மற்றொரு ஊழியரின் தனிப்பட்ட தகவல்களை அணுகவோ அல்லது பெறவோ கூடாது அல்லது மற்றொரு ஊழியரின் தனிப்பட்ட தகவல்களை Ball-இல் பணிபுரிபவருக்கோ அல்லது வெளிப்புறம் எவருக்குமோ வெளியிடக்கூடாது. நம்மிடம் முறையான ஒப்புதல் இருக்கும் பட்சத்திலும் மற்றும் வேறொரு ஊழியரின் தனிப்பட்ட தகவல்களைப் பயன்பாடு சட்டரீதியாக வணிக நோக்கத்திற்காகவும் மற்றும் சட்டத் தேவைகள் மற்றும் நிறுவனத்தின் கொள்கைகளுக்கு இணங்கவும் வழங்குவது மட்டும் விதிவிலக்கு ஆகும்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **உலகளாவிய தரவுப் பாதுகாப்புக் கொள்கையைப்** பாருங்கள்.



## ஊதியம் மற்றும் குழந்தைத் தொழிலாளர் சட்டங்களுக்கு இணங்குதல்

பொருந்தும் வேலைவாய்ப்பு மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க நாம் நம் வணிகத்தை மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். மற்ற விஷயங்களைப் பொறுத்தவரை, நம் ஊழியர்கள் அவர்கள் செய்யும் வேலைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக ஊதியம் மற்றும் மணிநேரச் சட்டங்களுக்கு இணங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். குழந்தை அல்லது கட்டாயத தொழிலாளிகள் அல்லது மனிதக் கடத்தல் நடைமுறைகளுக்கு சகிப்புத்தன்மை இல்லாக் கொள்கையைக் கொண்டுள்ளோம் மற்றும் நமது விநியோகச் சங்கிலியில் நம்மோடு இணையும் வணிகங்களோடும் அதே எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளோம்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **குழந்தை மற்றும் கட்டாயத் தொழிலாளிக் கொள்கை** மற்றும் **மனித உரிமைகள் கொள்கையைப்** பாருங்கள்.

## பணியிடப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்

வேலையில் சுகாதாரமும் பாதுகாப்பும் நமது மிக முக்கியமான முன்னுரிமைகளில் ஒன்றாகும் மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த ஆபத்துக்களைக் குறைக்க நாம் அனைவரும் பணிபுரிய வேண்டும். நாம் நமது சொந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பையும் அதே போல் நம் சக ஊழியர்களுடையதையும் பாதுகாக்க வேண்டும். இறுதி இலக்கான விபத்துகள் இல்லா பணியிடத்தை நோக்கிய தொடர்ச்சியான முன்னேற்றத்தில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். நமது பணிநிலைக்குப் பொருந்தக்கூடிய சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும் மற்றும் அனைத்து சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வழிநடத்தல்களையும் நாம் முழுமையாக பின்பற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கையைப்** பாருங்கள்.

### பணியிடத்தில் வன்முறை மற்றும் ஆயுதங்களைத் தடை செய்தல்

வன்முறை மற்றும் அச்சுறுத்தும் நடத்தை இல்லாத ஒரு சுற்றுச்சூழலில் பணியாற்ற நாம் தகுதி பெற்றிருக்கிறோம். விரோதமான அல்லது தவறான நடத்தை, அச்சுறுத்தல்கள் அல்லது வன்முறைச் செயல்கள் மற்றும் நிறுவன இடத்திற்குள் அல்லது உள்ளூர் சட்டங்களால் அனுமதிக்கப்பட்ட நிறுவன நடவடிக்கைகளின் போது தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருப்பதை Ball தடை செய்கிறது. இதோடு, அனைத்து ஊழியர்கள் மற்றும் நிறுவன வசதிகளுக்கு இடரிலா நிலை மற்றும் பாதுகாப்பினை வழங்க வேண்டி பணியிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட பார்வையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **பணியிட அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறை கொள்கையைப்** பாருங்கள்.



## போதைப்பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல்

நமது பணியிடத்தில் முழுமையான விழிப்புடன் இருந்து, நமது வேலைப் பொறுப்புகளைச் செய்ய வேண்டிய கடமை நமக்கு உள்ளது. அதாவது நிறுவனம் சார்ந்த உணவு அல்லது நிகழ்வின்போது மதுபானம் வழங்கப்பட்டால், அதிக அளவு அருந்திவிட்டு பணிக்கு வராமல், எப்போதும் நிதானமான மற்றும் சிறந்த முடிவை எடுக்கவேண்டும். மதுபானம், போதைப்பொருட்கள் மற்றும் சட்டவிரோதமான பொருட்களின் தவறான பயன்பாடு நமது கடமைகளின் கடுமையான மீறலாகும், மேலும் இது நமது பாதுகாப்பை ஆபத்தில் வைத்து, நமது வேலையின் செயல்திறனையும் சமரசம் செய்துவிடும்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **பணியிடத்தில் போதைப்பொருள் துஷ்பிரயோகம் கொள்கையைப்** பாருங்கள்.

வேலையில் நமது சுகாதாரமும் பாதுகாப்பும் நமது மிக முக்கியமான முன்னுரிமைகளில் ஒன்றாகும் மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆபத்துக்களைக் குறைக்க நாம் அனைவரும் பணிபுரிய வேண்டும்.






# நம் நிறுவனத்தைப் பாதுகாத்தல்

## ஆர்வ முரண்பாடுகளைத் தவிர்த்தல்

Ball ஊழியர்களாக, நாம் நம் நிறுவனத்தின் உரிமையாளர்களைப் போல நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதாவது நிறுவனத்தின் சிறந்த நலன்களுக்காக செயல்படும் பொறுப்பு நமக்கு உள்ளது. நமது நிறுவனத்தின் சிறந்த நலன்களுக்கும் நற்பெயருக்கும் முரண்பாடாக, பாரபட்சமாக அல்லது தீங்கு விளைவிப்பதாக இருக்கும் அல்லது தோன்றும் தனிப்பட்ட ஆர்வங்கள் அல்லது உறவுகள் இல்லாது நாம் பணியாற்ற வேண்டும் எதிர்பார்க்கப்படுகிறது. நிறுவனத்தின் ஆஸ்திகள், சொத்து, அல்லது தகவல், பதவி இவற்றை முறையற்ற தனிப்பட்ட லாபத்திற்காகப் பயன்படுத்தக்கூடாது அல்லது Ball உடன் போட்டியிடும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபடவும் கூடாது.

Ball ஊழியர்களாக, நாம் நம் நிறுவனத்தின் உரிமையாளர்களைப் போல நடந்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதாவது நிறுவனத்தின் சிறந்த நலன்களுக்காக செயல்படும் பொறுப்பு நமக்கு உள்ளது.

ஆர்வ முரண்பாடுகள் பற்றிய சில உதாரணங்கள்

- தனிப்பட்ட முதலீடுகள்: பகுதியளவேனும் உங்களுக்குச் சொந்தமான ஒரு நிறுவனத்துடன் அல்லது Ball நிறுவனத்தின் பங்காளர் அல்லது போட்டியாளராக உங்கள் குடும்ப உறுப்பினர் பங்கேற்கும் நிறுவனங்கள் ஆகியவற்றோடு பரிவர்த்தனை செய்தல், குறிப்பாக Ball சார்பாக அந்த நிறுவனம் சார்ந்த முடிவுகளை எடுப்பதில் நீங்கள் ஈடுபட்டிருந்தால்
- உங்கள் சொந்த நலன்களை அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காக Ball-க்குள் உங்கள் பதவி அல்லது உறவைப் பயன்படுத்துதல், இதில் தனிப்பட்ட நலனுக்காக Bal- இல் வேலை செய்கையில் பெற்ற ரகசிய தகவல்களைப் பயன்படுத்துதலும் அடங்கும். இதில் உங்கள் உறவினர் சம்பந்தப்பட்ட்ட முடிவுகளை மேற்பார்வை செய்வது அல்லது நேரடியாக முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டிருப்பது ஆகியவையும் அடங்கும்
- நீங்கள் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க நிதி அல்லது பிற ஆர்வம் அல்லது உறவு கொண்டுள்ள வணிகக் கூட்டாளர்களுக்கு ஒப்பந்தங்களை அங்கீகரிப்பது, குறிப்பாக நீங்கள் முக்கிய முடிவுகள் மீது செல்வாக்கு செலுத்தும், ஒப்பந்தங்களின் மதிப்பாய்வு, பேச்சுவார்த்தை நடத்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் அல்லது அந்த வணிகக் கூட்டாளருடன் நேரடியாக Ball-இன் வணிக கொடுக்கல் வாங்கல்களைக் கையாளுதல் போன்ற பொறுப்பில் இருந்தால்

இந்தச் சூழ்நிலைகள் சில சந்தர்ப்ப சூழல்களால் எழுகின்றன, விதிமீறல் மட்டுமே காரணம் அல்ல; இருப்பினும் சாத்தியமான முரண்பாட்டை வெளிப்படுத்தாமல் இருப்பதும் மீறல் ஆகும். எனவே, இதுபோன்ற சாத்தியமான அல்லது நடைமுறையான சூழ்நிலை ஏற்பட்டால், அது குறித்து உங்கள் மேலாளருடன் கலந்து பேசுங்கள்.

- தனிப்பட்ட பயன்பாடு அல்லது அங்கீகரிக்கப்படாத செயல்களுக்காக வசதிகள், உபகரணங்கள், பணியாளர்கள், பொருட்கள் அல்லது ரகசியத் தகவல்கள் உள்ளிட்ட Ball நிறுவன வளங்களைப் பயன்படுத்துதல் அல்லது எடுத்துக்கொள்ளுதல்
- இதற்கு முன் Ball உடன் நிலுவையில் இருந்த அல்லது இப்போது செயல்படுத்தப்பட்ட வணிகம் அல்லது ஒப்பந்தங்களைக் கொண்ட வணிக கூட்டாளர்களிடமிருந்து ஏதேனும் மதிப்புமிக்கதைத் தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்ளுதல்
- இராணுவம் மற்றும் சிவில் சர்வீஸ் பணியாளர்கள் உட்பட முன்னாள் அல்லது தற்போதைய அரசு ஊழியர்களை சட்டப்பூர்வத் தேவைகள் அல்லது நிறுவனத்தின் கொள்கைகளுக்கு முரணாக வேலைக்கு எடுத்தல் அல்லது அவர்களுக்கு வேலை வழங்குதல்
- Ball ஊழியராக இருக்கும்போதே ஒரு போட்டியாளர் நிறுவனத்தில் ஊழியராக, ஆலோசகராக அல்லது பங்குதாரராகப் பணிபுரிதல், அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்தின் ஊழியராகவோ அல்லது ஆலோசகராகவோ மாறுதல்
- Ball-இன் ஒருமைப்பாடு அல்லது நற்பெயரை மோசமாகப் பிரதிபலிக்கும் வகையில் வெளிப்புற நடவடிக்கையில் ஈடுபடுதல் அல்லது வெளிப்புற வாடிக்கையாளர், சப்ளையர் அல்லது பிற நிறுவனத்துடன் உறவு கொள்தல்

இந்தச் சூழ்நிலைகள் சில சந்தர்ப்ப சூழல்களால் எழுகின்றன, விதிமீறல் மட்டுமே காரணம் அல்ல; இருப்பினும் சாத்தியமான முரண்பாட்டை வெளிப்படுத்தாமல் இருப்பதும் மீறல் ஆகும். எனவே, இதுபோன்ற சாத்தியமான அல்லது நடைமுறையான சூழலை சந்திக்க நேர்ந்தால், அது குறித்து உங்கள் மேலாளருடன் கலந்து பேசுங்கள்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **ஆர்வ முரண்பாடுகள் கொள்கையைப்** பாருங்கள்.

**தெரிந்துகொள்வது நல்லது**

*உறவினர்களில் பெற்றோர்கள், உடன்பிறப்புகள், வாழ்க்கைத்துணைகள், சட்டப்பூர்வமான பாதுகாவலர்கள், குழந்தைகள், மாமனார்-மாமியார், தாத்தா, பாட்டி, பேரப்பிள்ளைகள், நெருங்கிய-உறவினர்கள் அல்லது உங்கள் வீட்டில் வழக்கமாக வசிக்கும் நபர் ஆகியோர் அடங்குவர்*

## கணக்கு வழக்குகள் மற்றும் பதிவுகளைத் துல்லியமாக வைத்திருத்தல்

நிறுவனத்தைப் பற்றிய அனைத்து அறிக்கைகளும் தகவல்களும் துல்லியமாக, முறையாக, நியாயமான முறையில் மற்றும் நல்ல வணிக நடைமுறைகள் மற்றும் பொருந்தும் கணக்கியல் தரநிலைகள் மற்றும் சட்டத் தேவைகளுக்கு ஏற்ப பதிவுசெய்யப்பட வேண்டும். பதிவுகள் அல்லது அறிக்கைகள் நேர அட்டைகள், செலவு அறிக்கைகள், உற்பத்திப் பதிவுகள், சோதனை அறிக்கைகள், சுற்றுச்சூழல் பதிவுகள், கணக்கியல் பதிவுகள், கடிதத் தொடர்பு, விலைக்குறிப்பீடுகள், கொள்முதல் ஆர்டர்கள் அல்லது இதுபோன்ற ஆவணங்கள் என எதுவாக இருந்தாலும், அவை நேர்மையானதாகவும் முழுமையானதாகவும் இருக்க வேண்டும். கூடுதலாக:

- அனைத்துப் பதிவுகளும் நிதி அறிக்கைகளும் நிறுவனத்தின் அனைத்து பரிவர்த்தனைகளுடன் துல்லியமாகப் பிரதிபலிக்க வேண்டும்.
- நிறுவனப் பதிவுகளில் எந்த நோக்கத்திற்காகவும் எவ்விதத் தவறான அறிக்கைகளும் அல்லது உள்ளீடுகளும் மேற்கொள்ளப்படக்கூடாது.
- அனைத்து செலவுகளையும் முறையாகப் பதிவு செய்தல், வெளிப்படுத்துதல் மற்றும் வசூலித்தல் ஆகியவற்றை உறுதிபடுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும்.

அதோடு, நாம் இயங்கும் இடங்களில் பதிவு மேலாண்மைக் கொள்கைகள் மற்றும் தக்கவைப்பு அட்டவணைகளைப் பின்பற்ற வேண்டும். இந்த அட்டவணைகள் நாம் வணிகப் பதிவுகளைப் பராமரிக்க வேண்டிய காலகட்டத்தையும் மற்றும் சாத்தியமான, தற்போதுள்ள அல்லது கடந்த வழக்குகள் தொடர்பான வழக்குகளுக்கு இணங்கி நடக்கும் நடைமுறைகளையும் குறிப்பிடுகின்றன.

பதிவுகளை உருவாக்குவதற்குப் பங்களிக்கும் ஊழியர்கள் அல்லது அறிக்கைகளைப் பூர்த்திசெய்பவர்கள் அல்லது தயாரிப்பவர்கள், தங்கள் நிறுவனத்திற்கு பொருந்தும் கார்ப்பரேட் மற்றும் பிரிவு/பிராந்தியக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் படித்து புரிந்துகொள்வதற்கு பொறுப்பாவார்கள். நேரம் சார்ந்து வசூலித்தல் முறையான நேரத்தில் துல்லியமாகப் பதிவு செய்யப்பட வேண்டும், மேலும் தொழிலாளர் சார்ந்து வசூலிக்கும் நடைமுறைகள் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். ஊழியர்கள் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கணக்குவைப்பு மற்றும் மேலாண்மை அமைப்புகளைப் பயன்படுத்த வேண்டும். மேலாளர்கள் இந்தத் தரங்கள் கண்டிப்பாக அமல்படுத்தப்படுவதை உறுதி செய்து இதிலிருந்து விலகுதல்களைத் தடுக்க வேண்டும் மற்றும் ஏதேனும் முறைகேடுகள் இருப்பின் தாமதம் செய்யாமல் தங்கள் மேலாளரிடம் தெரிவிக்க வேண்டும்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **பதிவுகள் மேலாண்மைக் கொள்கையை** பாருங்கள்.

### கேள்வி & பதில்

கே: ஜெரோம் தனது துறையின் காலாண்டு நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்குப் பொறுப்பானவர், மேலும் பொதுவாக ஏதேனும் தவறுகளை விரைவாகக் கண்டறிந்து சரிசெய்யக்கூடியவர். இவை வழக்கமாக விரைவான உள்ளீடுகள் மற்றும் எழுத்தர் பிழைகள் ஆகியவற்றால் ஏற்படுபவையாகும், மேலும் அவற்றை சரிசெய்ய ஜெரோமிற்கு அதிக நேரம் தேவைப்படாது. இருப்பினும், இந்தக் காலாண்டில், அவர் மிகவும் சிக்கலானதாகவும், வேண்டுமென்றே செய்தது போலவும் தோன்றும் தொடர்ச்சியான முறைகேடுகளைக் கவனித்து வருகிறார். கடைசியில் அவர் தவறாக அறிக்கையிடப்பட்ட வருவாயின் மூலத்தைச் சுட்டிக்காட்டுகிறார், மேலும் இந்த உள்ளீடுகள் ஒரு பெரிய மோசடிச் செயலின் ஒரு பகுதியாக இருக்கக்கூடும் என்று நம்புகிறார். அவர் இப்போது என்ன செய்ய வேண்டும்?

*ப: ஜெரோம் முன்வந்து பேச வேண்டும். அவர் தனது குழுவின் நிதி அறிக்கையில் சாத்தியமான மோசடிகளைக் கண்டுபிடித்துள்ளார், அவர் தனது மேலாளர், மனிதவளப் பிரதிநிதி அல்லது இணக்க உடன்பாட்டுக் குழுவுடன் தொடர்புகொண்டு உடனடியாகத் தனது கவலையைக் கூற வேண்டும். தவறுகளை சரிசெய்தால் மட்டும் போதாது. முறைகேடு எதுவும் நடக்கவில்லை என்று அடுத்தடுத்த விசாரணையில் தீர்மானிக்கப்பட்டாலும் கூட அத்தகைய அறிக்கையை வழங்கியதற்காக ஜெரோம் எந்தப் பதிலடியையும் எதிர்கொள்ள மாட்டார்.*

## அரசாங்கத் தணிக்கைகள், விசாரணைகள் மற்றும் புலனாய்வுக்கு பதிலளித்தல்

அரசாங்க விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டிய கடமை நமக்கு உள்ளது. கோரப்பட்டபடி, சரியான நேரத்தில் சரியான தகவல்களை நாம் வழங்க வேண்டும் என்பது இதன் பொருள். இருப்பினும், எந்தவொரு ஆவணங்களையும் வழங்கும் முன் அல்லது நேர்காணலுக்குச் சமர்ப்பிக்கும் முன், முறையாகப் பதிலளிக்கத் தேவையான அனைத்துத் தகவல்களும் நம்மிடம் இருப்பதை உறுதிபடுத்த வேண்டி நாம் சட்டத் துறை மற்றும் பிற தொடர்புடைய வணிக அல்லது கார்ப்பரேட் செயல்துறைகளை முதலில் தொடர்பு கொள்ள வேண்டும்.

நிறுவனம் பற்றிய அனைத்து புகார்களும் மற்றும் தகவல்களும் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

# நம் நிறுவனத் தகவல்களைப் பாதுகாத்தல

## விஷயம் அறிந்தவரது தவறான செயல்பாடுகளைத் தடுத்தல்

நமது நிறுவனம் அல்லது நாம் வணிக உறவு கொண்டுள்ள மற்ற நிறுவனங்கள் பற்றிய தகவல்கள், பொதுவல்லாத தகவல்கள் (பொதுவாக "உள் தகவல்" என்று அழைக்கப்படுகிறது) போன்ற, நமது நிறுவனத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு கிடைக்காத தகவல்களுக்கு Ball ஊழியர்கள் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புடைய பிறருக்கு பெரும்பாலும் அணுகல் இருக்கக்கூடும். Ball அல்லது மற்ற நிறுவனம் குறித்த தகவல்கள், பொதுவல்லாத தகவல்களை நாம் வைத்திருக்கும் நிலையில், Ball ஊழியர்களாக, Ball நிறுவனத்தின் பங்கு அல்லது பத்திரங்கள் தொடர்பான பரிவர்த்தனைகளிலும் அல்லது Ball வணிகள் மேற்கொள்ளும் மற்ற நிறுவனத்தின் பங்கு அல்லது பத்திரப் பரிவர்த்தனைகளிலும் ஈடுபடக்கூடாது.

### தெரிந்துகொள்வது நல்லது

*உள் தகவலில் அடங்குபவை:*

- *இணைப்புகள், கையகப்படுத்துதல் அல்லது விலக்குதல் சார்ந்த திட்டங்கள் பற்றிய தகவல்கள்*
- *புதிய தயாரிப்பு உருவாக்கம்*
- *சந்தைப்படுத்தல் உத்தி*
- *நிதி முடிவுகள்*
- *Ball-க்கு மூலப்பொருளாக விளங்குபவை சார்ந்து வாடிக்கையாளர்கள் அல்லது சப்ளையர்களுடனான ஒப்பந்தங்கள்*
- *நிறுவனத்திற்கு முக்கியப் பொருளாக இருக்கும் பிற குறிப்பிடத்தக்க வணிகப் பரிவர்த்தனைகள்*

*"பொருள்" என்பது பங்குகளை வாங்குவது அல்லது விற்பது போன்ற முதலீட்டு முடிவை எடுக்கும்போது ஒரு நியாயமான முதலீட்டாளர் முக்கியமானதெனக் கருதும் தகவலைக் குறிக்கிறது.*

உள் தகவல்களை யாருடனும் பகிராமல் இருப்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும் (பொதுவாக "உதவிக்குறிப்பு அளித்தல்" என்று அழைக்கப்படுகிறது).

மேலும் தகவலுக்கு BallConnect- இல் **விஷயம் அறிந்தவரது தவறான செயல்பாடுகள் கொள்கையை** பாருங்கள்.

Ball ஊழியர்களாக, நமது சொந்த அல்லது வேறு எவருடைய முதலீட்டு முடிவுகள் மீதும் செல்வாக்கு செலுத்துவதற்காக நாம் உள் தகவல்களைப் பயன்படுத்தக்கூடாது, மேலும் தகவல்கள், பொதுவல்லாத தகவல்களை வைத்திருக்கும் போது நாம் Ball பத்திரங்களில் பரிவர்த்தனை செய்யக்கூடாது.



## அறிவுசார் சொத்து மற்றும் நிறுவனத்திற்கு நம்பகமான தகவல்களைப் பாதுகாத்தல்

அவசியத்திற்கு ஏற்ப தெரிந்து கொள்தல் அடிப்படையில் நமது நிறுவனத்தின் ரகசிய தகவல்களின் அணுகலை நாம் கொண்டிருக்கலாம். அத்தகைய தகவல்களைப் பணியாற்றும் போதும் அதன் பிறகும் பாதுகாக்க வேண்டும், மேலும் அவற்றை தனிப்பட்ட லாபத்திற்காகப் பயன்படுத்தப்படக்கூடாது.

நிறுவனத்தின் ரகசியத் தகவல்கள் கவனமாகக் கட்டுப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும், உரிய நோக்கங்களுக்காக மட்டுமே அவை பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்களுடன் மட்டுமே அவசியப்பட்டால் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் விவாதிக்கப்பட வேண்டும். முறையான ஒப்புதல் வழங்கப்படும்வரை நிறுவனத்தின் கோப்புகள் அல்லது தகவல்களை அங்கீகரிக்கப்படாத நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு ஒருபோதும் பகிரவோ அல்லது வழங்கவோ கூடாது.

Ball-இன் அறிவுசார் சொத்து (IP) நமக்கு மதிப்புமிக்கது மற்றும் அது பாதுகாக்கப்பட வேண்டும். IP-இல் பதிப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள், வடிவமைப்புகள், லோகோக்கள் மற்றும் பிராண்டுகள் ஆகியவை அடங்கும்.

நம்முடன் பணிபுரியும் மூன்றாம் தரப்பினர் பெரும்பாலும் அவர்களின் ரகசிய தகவல்கள், IP போன்றவற்றை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்கள். நாம் நமக்கு சொந்தமானதைப் பாதுகாப்பதைப் போலவே அந்தத் தகவலையும் IP-ஐயும் கவனமாகப் பாதுகாக்கிறோம்.

### தெரிந்துகொள்வது நல்லது


*நிதித் தரவு, பணியிடச் செயல்பாடுகள், உற்பத்திச் செயல்முறைகள், உற்பத்திப் பதிவுகள், ஊழியர் தகவல், வணிகத் திட்டங்கள், மென்பொருள் கோப்புகள், கடவுச்சொற்கள், தொழில்நுட்ப தரவு, வரைபடங்கள், மூலோபாய மற்றும் இயக்கத் திட்டங்கள், வாடிக்கையாளர் தரவு, ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் பிற மதிப்புமிக்க நிறுவனத் தகவல்கள் ஆகியவை நிறுவனத்தின் ரகசிய தகவல்களில் அடங்கும்.*

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **ரகசியத்தன்மை கொள்கையை** பாருங்கள்.

## கேள்வி & பதில்

கே: கிரெட்டா லண்டனில் ஒரு வர்த்தக நிகழ்ச்சியில் கலந்துகொள்கையில் தற்செயலாகத் தனது லேப்டாப்பை ஒரு காபி கடையில் விட்டுவிடுகிறார். இரவு ஹோட்டலுக்கு திரும்பி வரும்போது அதைக் காணவில்லை என்பதை கவனிக்கிறார். கிரெட்டா தனது லேப்டாப்பில் நிறுவனத்தின் ரகசிய தகவல்கள் இருப்பதை அறிந்திருந்த போதிலும், காலையில் சென்று லேப்டாப்பைத் தேடத் திட்டமிடுகிறார். அவர் செய்யவேண்டியது இது மட்டும்தானா?

*ப: இல்லை. லேப்டாப்பில் நிறுவனத்தின் ரகசிய தகவல்கள் இருப்பதாக கிரெட்டாவுக்குத் தெரிந்திருந்தால், அவர் உடனடியாகத் தனது பிராந்திய தகவல் தொழில்நுட்பத் துறை, சட்டத் துறை மற்றும் அவரது மேலாளருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.*





## புறச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

நமது நிறுவனத்தின் சொத்துக்கள், வசதிகள், உபகரணங்கள் மற்றும் பணம் உள்ளிட்ட ஆஸ்திகளைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் நம் அனைவருக்கும் பொறுப்பு உள்ளது, மற்றும் நாம் அந்த ஆஸ்திகளைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறோம்.

## தகவலைப் பாதுகாத்தல்

நிறுவனத்தின் அனைத்து தகவல்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், Ball-இன் நெட்வொர்க் மற்றும் கணினி அமைப்புகளை நெறிமுறையுடனும் மற்றும் சட்டப்பூர்வமாகவும் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. இந்த அமைப்புகளை அவ்வப்போது தனிப்பட்ட பயன்பாட்டிற்கு பயன்படுத்த அனுமதிக்கப்பட்டாலும், உள்ளூர் சட்டத்தால் தடைசெய்யப்பட்டாலொழிய, நம் பயன்பாட்டைக் கண்காணிக்கும் உரிமை நம் நிறுவனத்திற்கு உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நம் நிறுவனத்தின் தகவல் மற்றும் தொடர்பு அமைப்புகளைப் பயன்படுத்தும்போது Ball நிறுவனத்தின் அனைத்துப் பாதுகாப்பு கொள்கைகளையும் உள் கட்டுப்பாடுகளையும் நாம் பின்பற்ற வேண்டும்.

கடவுச்சொல் பாதுகாப்புக் கொள்கைகளைக் கடைபிடிப்பதன் மூலம் நாம் நமது கடவுச்சொற்களையும் மற்றும் பிற அணுகல் குறியீடுகளையும் பாதுகாக்க வேண்டும். மற்றவர்கள் நமது கணக்குகளைப் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது. நிறுவனத் தகவல்கள் நம் கணினிகளிலிருந்து அங்கீகரிக்கப்படாத எடுத்துச்செல்லத்தக்க சாதனங்களுக்கு மாற்றப்படக்கூடாது.

இணையம் ஒரு பொது இடம் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். ஏதேனும் மின்னணு செய்தியை உருவாக்கும்போது, ஒரு முறை அனுப்பப்பட்டபின் அவை நமக்குத் தெரியாமல் அல்லது அனுமதியின்றி மாற்றப்படலாம், சிதைக்கப்படலாம் மற்றும் பிறருக்கு அனுப்பப்படலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நிறுவனத்தின் மற்ற ஆவணங்களை உருவாக்கும் போது நாம் எடுக்கும் அதே கவனத்துடன் மின்னஞ்சல்கள், உடனடிச் செய்திகள் மற்றும் குறுஞ்செய்திகள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும். எந்த நேரத்திலும் இணையம் அல்லது நம் மின்னஞ்சலை அங்கீகரிக்கப்படாத அல்லது சட்டவிரோத நோக்கங்களுக்காக அல்லது பாலியல் ரீதியான, வெளிப்படையான அல்லது சட்டவிரோதமான விஷயங்களைப் பதிவிறக்குவதற்காக பயன்படுத்தக்கூடாது.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **பொருத்தமான பயன்பாடு கொள்கை**மற்றும் பிற தகவல் தொழில்நுட்ப கொள்கைகளைப் பாருங்கள்.

நிறுவனத்தின் மற்ற ஆவணங்களை உருவாக்கும் போது நாம் எடுக்கும் அதே கவனத்துடன் மின்னஞ்சல், உடனடிச் செய்திகள் மற்றும் குறுஞ்செய்திகள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும்.

## சமூக ஊடகத்தைப் பயன்படுத்தல்

நிறுவனத்தைப் பற்றி பொதுக் கருத்தை வடிவமைப்பதில் இணையத்தின் முக்கியத்துவத்தை Ball கண்டுணர்கிறது. சமூக ஊடகங்கள் மூலம் தொழில்துறை உரையாடல்களை இயக்குவதில் ஊழியர்களின் முக்கிய பங்கையும் நாம் அங்கீகரிக்கிறோம். வலைப்பதிவுகள் மற்றும் பிற சமூக ஊடகத் தொடர்புகளில் ஈடுபடுவதன் மூலம் ஆன்லைனில் அறிவார்ந்த விஷயங்களில் ஈடுபடுவதற்கான ஊழியர்களின் உரிமையை ஆதரிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போது, பின்பற்ற வேண்டிய சில பொதுவான நினைவூட்டல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் இங்கே உள்ளன:

- Ball நிறுவனம் குறித்த தகவல்கல், பொதுவல்லாத தகவல்களை ஒருபோதும் வெளியிடக் கூடாது.
- நீங்கள் Ball-ஐப் பற்றி ஏதாவது பதிவிடுகிறீர்கள் என்றால், நிறுவனத்துடனான உங்கள் உறவை வெளிப்படுத்த வேண்டுமென உள்ளூர் சட்டம் குறிக்கிறதா என்பதைத் தீர்மானியுங்கள்.
- சமூக ஊடகங்களில் பதிவுசெய்யப்படும் செய்திகள் மின்னஞ்சலைப் போலவே நிரந்தர பதிவுகளாகும், அவற்றை நம் அனுமதியின்றி அனுப்பவும் மாற்றவும் முடியும்.
- உங்களது தனிப்பட்ட சமூக ஊடக நடவடிக்கைகள் மற்றும் தகவல்தொடர்புகள் மூலம் வாடிக்கையாளர் அல்லது ஊழியர் தகவல், பதிப்புரிமை பெற்ற தகவல்கள் அல்லது உள் தகவல்கள் போன்ற நிறுவனத்திற்கு நம்பகமான தகவல்கள் எதையும் நீங்கள் பகிரக்கூடாது.
- இந்த விதிகள் அல்லது நிறுவனக் கொள்கைகளை மீறுவது போன்ற வேற்றுமை உணர்வு கொண்ட அல்லது தொல்லை அளித்தல் போன்ற கருத்துகள் அல்லது முறையற்ற அல்லது அவமதிக்கும் படங்கள் போன்ற உள்ளடக்கத்தைப் பதிவு செய்யாமல் அல்லது பிறருக்கு அனுப்பாமல் மற்றவர்களை மதித்திடுங்கள்.
- ஒரு பொதுவான விதியாக, நீங்கள் ஒரு நியமிக்கப்பட்ட நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளராக இல்லாவிட்டால் Ball நிறுவனத்தின் சார்பாக கருத்துத் தெரிவிக்காதீர்கள்.

நமது சமூக ஊடக செயல்பாட்டுக் கொள்கையானது வேலை தொடர்பான வலைப்பதிவு, பதிவுகள் மற்றும் பிற இணைய செயல்பாடுகள் குறித்து சரியான முடிவுகளை எடுப்பதற்கும் மற்றும் ஆன்லைன் உலகில் மற்றவர்களுக்கு பதிலளிப்பதற்கும் நமக்கு வழிகாட்டுதலை வழங்குகிறது. இந்தக் கொள்கை நாம் பணியில் இல்லாதபோதும்கூட நமது சமூக ஊடகச் செயல்பாடுகளுக்கு பொருந்தும்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **சமூக ஊடக செயல்பாடு கொள்கையை** பாருங்கள்.

## கேள்வி & பதில்

கே: சமூக ஊடகத்தில் பதிவுகளைப் படிக்கும் போது ஸ்டீவன் Ball-ஐப் பற்றிய சில அறிக்கைகள் தவறாக இருப்பதைக் கவனிக்கிறார். அவர் நேரடியாகப் பதிலளித்து தீர்க்க வேண்டுமா?

*ப: இல்லை. ஸ்டீவன் அறிக்கைகளுக்கு பதிலளிக்கக் கூடாது, ஆனால் அவர் **சமூக ஊடகச் செயல்பாட்டுக் கொள்கையை** பார்த்து தனது அறிக்கைகளைப் பற்றி அவரது மேலாளருக்கு தெரியப்படுத்த வேண்டும்.*

## முதலீட்டாளர்கள், ஊடகங்கள் மற்றும் ஆர்வக் குழுக்களுடன் தொடர்புகொள்ளுதல்

முதலீட்டாளர்கள், பகுப்பாய்வாளர்கள், பத்திரிகைகள் மற்றும் பொது நலக் குழுக்களுகளுடன் நமது நிறுவனத்தின் தகவல்கள் ஒருமித்த முறையில் வழங்கப்படவேண்டும், மேலும் நம் நிறுவனத்தின் தகவல்தொடர்புகள், பொருந்தும் சட்டத் தேவைகள் மற்றும் நிறுவனக் கொள்கைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும். அறிக்கை ஆன்லைனில் இருந்தாலும், நாம் நமது நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட செய்தித் தொடர்பாளராக இல்லாத நிலையில் அல்லது கார்ப்பரேட் தகவல் தொடர்பு துறை அல்லது முதலீட்டாளர் உறவுத் துறையை முதலில் தொடர்பு கொள்ளாமல் நிறுவனத்தின் சார்பாக நாம் கருத்துத் தெரிவிக்கக் கூடாது.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **பொதுத் தொடர்புகள் கொள்கை** மற்றும் **பொது விவகாரக் கொள்கையைப்**பாருங்கள்.

அறிக்கை ஆன்லைனில் இருந்தாலும், நம் நிறுவனத்தின் சார்பாக நாம் தொடர்பு கொள்ளக்கூடாது.



# நமது வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் பிற வணிக கூட்டாளர்களைத் தொடர்புகொள்ளுதல்

## பரிசுகள் மற்றும் பணிக்கொடைகளை வழங்குதல் மற்றும் பெறுதல்

அனைத்து வணிகக் கொடுக்கல் வாங்கல்களிலும், நம் நிறுவனத்திற்காக அல்லது நிறுவனத்தின் சார்பாகப் பணிபுரிபவர் உண்மையான அல்லது உணரப்பட்ட முறையற்ற வழிகளைத் தவிர்க்கும் முறையில் தன்னை நடத்திக்கொள்ள வேண்டும். தற்போதுள்ள அல்லது வருங்கால வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் அல்லது பிற வணிகக் கூட்டாளர்களுடன் உணவு மற்றும் பொழுதுபோக்கு போன்ற சாதாரணப் பரிசுகள் அல்லது பிற பணிக்கொடைகளை நாம் எப்போதாவது கொடுக்கலாம் அல்லது பெறலாம். இருப்பினும், ஒரு வணிக முடிவை முறையற்ற முறையில் பாதிக்கும் நோக்கத்துடன் ஏதேனும் பரிசு அல்லது பணிக்கொடை வழங்கப்படுவதாகவோ அல்லது பெறப்படுவதாகவோ கருதப்பட்டால் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் எழலாம்.

அனைத்து வணிகக் கொடுக்கல் வாங்கல்களிலும், நம் நிறுவனத்திற்காக அல்லது நிறுவனத்தின் சார்பாகப் பணிபுரிபவர் உண்மையான அல்லது உணரப்பட்ட முறையற்ற வழிகளைத் தவிர்க்கும் முறையில் தன்னை நடத்திக்கொள்ள வேண்டும்.

முறையற்ற பரிசுகள் மற்றும் பணிக்கொடைகளுடன் தொடர்புடைய ஆபத்தைக் குறைக்க, நாம் அளிக்கும் அல்லது பெறும் எந்தவொரு பரிசும் அல்லது பணிக்கொடையும் இவ்வாறு இருக்க வேண்டும்:

- வணிக நோக்கத்துடன் தொடர்புடையது
- நேரம் மற்றும் இடத்திற்கு ஏற்றது
- பெயரளவில் மதிப்பு கொண்டது
- எப்போதேனும்
- விரும்பிக் கேட்காதது
- கிஃப்ட் கார்டுகள் போன்ற பணம் அல்லது ரொக்கத்திற்கு சமமானவற்றைத் தவிர வேறு ஏதாவது
- முறையாக ஆவணப்படுத்தப்பட்டது
- பொருந்தும் நிறுவனம்/பிற தரப்புக் கொள்கைகளுக்கு இணங்குவது (கொடுப்பவர் மற்றும் பெறுநர் இருவரும்)
- உள்ளூர் சட்டங்கள் உட்பட பொருந்தும் சட்டத் தேவைகளுக்கு இணங்குவது
- முறையற்ற கருத்தைப் பதிவு செய்யாத பரிவர்த்தனை

இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத எந்தவொரு பரிசையும் அல்லது பணிக்கொடையையும் வழங்குவோர் மனம் கோணாத வகையில் நிராகரிக்க நாம் தயாராக இருக்க வேண்டும்.

கூடுதலாக, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் துறைகள் பெரும்பாலும் தங்கள் ஊழியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து பரிசுகள் அல்லது பிற பணிக்கொடைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பாகக் கடுமையான நிபந்தனைகளின் கீழ் செயல்படுகின்றன. அரசாங்க நிறுவனங்களின் இந்தத் நிபந்தனைகளையும் மற்றும் வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுடன் வலுவான உறவைக் கொண்டிருக்கும் பிற வணிகக் கூட்டாளிகள் ஆகியோரின் நிபந்தனைகளையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **கார்ப்பரேட் சொத்துக்களின் பயன்பாட்டுக் கொள்கை** மற்றும் **வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் / உலகளாவிய ஊழல் எதிர்ப்புக் கொள்கையைப்**பாருங்கள்.

## **தெரிந்துகொள்வது நல்லது -** U.S. அரசாங்கத்திற்கு

*U.S. அரசு ஊழியர்கள் குறைந்த மதிப்புள்ள மற்றும் $20/$50 விதிக்கு உட்பட்ட (கீழே விவரிக்கப்பட்டுள்ளது) விளம்பரப் பொருட்களைத் தவிர வேறு எவ்வித மதிப்பு கொண்ட எந்தப் பரிசையும் அல்லது பணக்கொடையையும் ஏற்றுக்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைகளின் அடிப்படையில், U.S. அரசாங்கத்துடன் வலுவான உறவு கொண்டுள்ள வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் சப்ளையர்களுக்கு பரிசுகள் அல்லது பிற பணக்கொடைகளை அளிப்பது அல்லது வழங்குவது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மொத்த மதிப்பானது $20-கும் மேல் இல்லாமல் இருந்தால் மட்டும் அனுமதிக்கப்படுகிறது. கூடுதலாக, ஒரு காலண்டர் ஆண்டில் வழங்கப்பட்ட பரிசுகள்/பிற பணக்கொடைகளின் மொத்த மதிப்பு $50-க்கு மேல் இருக்கக் கூடாது.*

*U.S. காங்கிரஸின் உறுப்பினர்கள் அல்லது அவர்களது ஊழியர்களுக்கு வழங்கப்படும் பரிசுகள் மற்றும் பணக்கொடைகள் நேர்மையானத் தலைமைத்துவம் மற்றும் வெளிப்படையான அரசாங்க சட்ட 2007-ஆல் கட்டுப்படுத்தப்படுகிறது. இந்தக் கட்டுப்பாடுகளின் பெரும் சிக்கல் காரணமாக, U.S. காங்கிரஸ் உறுப்பினர்கள் அல்லது அவர்களது ஊழியர்களுக்கு நிறுவனத்தின் முன்கூட்டிய ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு பரிசையும் அல்லது பணக்கொடையையும் Ball ஊழியர்கள் வழங்கக்கூடாது. இந்தக் கட்டுப்பாடுகள் வணிகம் சாராத சூழலில் ஊழியர்களால் அளிக்கப்படும் அரசியல் பங்களிப்புகளுக்கு பொருந்தாது.*

## கேள்வி & பதில்

கே: ஒரு Ball சப்ளையருக்காகப் பணிபுரியும் ஃபிலிப், சமீபத்தில் ஜோசி என்பவருக்கு ஒரு விலையுயர்ந்த ரோலக்ஸ் கைக்கடிகாரத்தை ஒரு குறிப்புடன் அனுப்பினார், அதில் “உங்களது தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி. இன்னும் பல ஆண்டுகள் உங்களுடன் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதை எதிர்நோக்குகிறோம்! ” என்று இருந்தது, ஃபிலிப்பைப் புண்படுத்த ஜோசி விரும்பவில்லை, ஆனால் அத்தகைய விலையுயர்ந்த பரிசை ஏற்றுக்கொள்ள அவருக்கு சங்கடமாக இருக்கிறது. இப்போது ஜோசி என்ன செய்ய வேண்டும்?

*ப: ஜோசி கைக்கடிகாரத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது. இது ஒரு நல்ல சைகை என்றாலும், அது விலையுயர்ந்த மதிப்பு கொண்டிருப்பதால் அல்லது தோன்றுவதால், ஜோசியின் வணிக முடிவுகளின் மீது செல்வாக்கு செலுத்தும் நோக்கம் கொண்டதாக பரிசு உள்ளது. Ball ஊழியர்களாக, நமது விற்பனையாளரின் உறவுகள் மற்றும் வாங்கும் முடிவுகள் எப்போதும் தகுதியின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும், பரிசின் அடிப்படையில் அல்ல. ஜோசிக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது ஃபிலிப்பிற்கு பரிசைத் திருப்பித் தருவது அவரைப் புண்படுத்தும் என்று நினைத்தால், அவர் வழிகாட்டுதலுக்காக இணக்க உடன்பாட்டுக் குழு, சட்டத் துறை அல்லது அவரது மேலாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.*

# லஞ்சம் மற்றும் ஊழலைத் தவிர்த்தல்

நாம் நமது புதுமையான தயாரிப்புகள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாக இருப்பது மீதான நமது கவனம் ஆகியவற்றின் அடிப்படையில் சந்தையில் போட்டியிடுகிறோம். நாம் நமது வணிகக் கூட்டாளர்களுக்கோ அல்லது எந்த அரசாங்க அதிகாரிகளுக்கோ ஒருபோதும் லஞ்சம் கொடுப்பதோ, தவறாக செல்வாக்கு செலுத்துவதோ இல்லை.

U.S. வெளிநாட்டு ஊழல் நடைமுறைச் சட்டம், U.K. லஞ்சச் சட்டம், பிரேசிலிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் மற்றும் இதே போன்று பல நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் உள்ளிட்ட லஞ்சம் மற்றும் ஊழலைத் தடைசெய்யும் பல சர்வதேச சட்டங்கள் உள்ளன. முக்கியமாக, லஞ்சம் ஓர் உள்ளூர் வழக்கமாக விவரிக்கப்பட்டாலும் அல்லது சிறிய அளவில் இருந்தாலும், அவை எப்போதும் சட்டத்திற்கு விரோதமானவை ஆகும் மற்றும் அவை எப்போதும் நிறுவனத்தின் கொள்கைக்கு எதிரானவை ஆகும்.

ஊழல் எதிர்ப்புச் சட்டங்களை மீறியதற்காக தனிநபர்கள் மற்றும் நிறுவனம் இரண்டும் கடுமையாகத் தண்டிக்கப்படலாம், மேலும் அப்படிப்பட்ட எந்தவொரு வணிக வாய்ப்பும் நேர்மைக்கான நமது நற்பெயரை விட அதிகமானது கிடையாது. ஓர் அரசாங்க அதிகாரி அல்லது நமது வணிகக் கூட்டாளிகள் எவரேனும் நமக்கு சாதகமாக முடிவெடுப்பதில் செல்வாக்கு செலுத்துவதற்காக மதிப்பு கொண்ட எவற்றையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வழங்கவோ, உறுதியளிக்கவோ அல்லது செலுத்தவோ நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்வதில்லை. நமக்காகவோ அல்லது நிறுவனத்தின் சார்பாகவோ நாம் லஞ்சத்தைக் கோரவோ அல்லது ஏற்றுக்கொள்வதோ இல்லை மற்றும் நாம் கையூட்டங்களை வழங்குவதோ அல்லது பெறுவதோ இல்லை.

நாம் பல மூன்றாம் தரப்பினருடன் இணைந்து பணியாற்றுகிறோம், அவர்களில் சிலர் நமது சார்பாகச் செயல்படலாம் அல்லது அரசாங்க அதிகாரிகளுடன் கூட தொடர்பு கொள்ளலாம். எனவே, இந்த மூன்றாம் தரப்பினருடன் ஈடுபடும்போது நாம் கவனமாக இருக்க வேண்டும், மேலும் அவர்கள் நம் சார்பாக எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும். நமது மூன்றாம் தரப்பினரும் நம் நிறுவனத்தின் அதே ஊழல் எதிர்ப்புத் நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளதால், நம் சார்பாக லஞ்சம் அளிக்கும் அல்லது லஞ்சம் பெறும் எந்த மூன்றாம் தரப்பினருடனும் நாம் வணிகம் மேற்கொள்வதில்லை.

மேலும் தகவலுக்கு, இணக்க உடன்பாட்டுக் குழு அல்லது சட்டத் துறையைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது BallConnect இல் **வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் / உலகளாவிய ஊழல் எதிர்ப்பு கொள்கையைப்**பாருங்கள்.

நமக்காகவோ அல்லது நிறுவனத்தின் சார்பாகவோ நாம் லஞ்சத்தைக் கோரவோ அல்லது ஏற்றுக்கொள்வதோ இல்லை மற்றும் நாம் கையூட்டல்களை வழங்குவதோ அல்லது பெறுவதோ இல்லை.

## தெரிந்துகொள்வது நல்லது

*ஓர் அரசாங்க அதிகாரி என்பவர் ஓர் அதிகாரி, பணியாளர் அல்லது ஓர் அரசாங்க நிறுவனத்தின் பிரதிநிதி அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான அல்லது கட்டுப்படுத்தப்பட்ட வணிகத்தின் ஊழியராக இருக்கலாம். இந்தச் சொற்கூறு பரவலாக வரையறுக்கப்பட்டுள்ளது, இதில் அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்களும் அடங்குவார்கள் மற்றும் அரசாங்க இணைப்பு வெளிப்படையாக இல்லாதோருக்கும் இது பொருந்தும், உதாரணமாக வெளிநாட்டு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் ஒரு நிறுவனத்தின் பொது மேலாளர்.*

*மூன்றாம் தரப்பு முகவர்கள் என்போர், முகவர்கள், ஆலோசகர்கள், பிரதிநிதிகள், சப்ளையர்கள், விநியோகஸ்தர்கள் போன்ற Ball-இன் ஊழியராக இல்லாமல் Ball-இன் சார்பாகச் செயல்பட அங்கீகாரம் பெற்றிருப்பார்கள்.*

## கேள்வி & பதில்

கே: தெரியாத ஒரு நாட்டில் ஒரு புதிய Ball வசதியைத் திறப்பதற்கு அனுமதி பெற ஈவன் முயற்சிக்கிறார். ஒரு குறிப்பிட்ட உள்ளூர் ஆலோசகரை நியமித்து அவருக்கு கட்டணம் வழங்கினால், அனுமதிகளை எளிதாகப் பெற முடியும் என்று அவருக்கு கூறப்பட்டது. அவர் தொடர வேண்டுமா?

*ப: இவான் கவனமாக இருக்க வேண்டும். நாம் மூன்றாம் தரப்பினருடன் பணிபுரியும் போது, அவர்கள் ஊழல் எதிர்ப்புத் நிபந்தனைகள் உள்ளிட்ட பொருந்தும் அனைத்து சட்டத் தேவைகளுக்கும் இணங்குகிறார்கள் என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். மூன்றாம் தரப்பு முகவர்களைப் பயன்படுத்துவதற்கான அனைத்து உரிய நடைமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்தல் அல்லது மூன்றாம் தரப்பினரின் நடவடிக்கைகள் குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், இணக்க உடன்பாட்டுக் குழு அல்லது சட்டத் துறையைத் தொடர்பு கொள்ளவும்.*

# நியாயமான முறையில் வணிகத்தை நடத்துதல்

## நியாயமான போட்டி

நம் நிறுவனத்திற்கு பொருந்தும் பல சர்வதேச சட்டங்கள் உள்ளன, அவை போட்டியாளர்களுடனும் மற்றும் பிற போட்டி எதிர்ப்பு வணிக நடவடிக்கைகள் சார்ந்தும் மேற்கொள்ளும் சில கலந்துரையாடல்களை சட்டவிரோதமாக்குகின்றன. உதாரணமாக, ஒரு வெளிப்படையான ஒப்பந்தத்தின் மூலமாகவோ அல்லது கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலமாகவோ வணிகப் போட்டியாளர்கள் தங்கள் தயாரிப்புகளுக்கான விலைகள் அல்லது லாப வரம்புகளை நிர்ணயிப்பது; அவர்களது தயாரிப்புகளுக்கான உற்பத்தி நிலைகளை அமைப்பது; புவியியல் அல்லது வாடிக்கையாளர் ரீதியாக தங்கள் தயாரிப்புகளுக்கான சந்தைகளைப் பிரிப்பது; அல்லது போட்டியின் ஏல அடிப்படையில் வழங்கப்படும் வாய்ப்புகளுக்கான கூட்டு ஏலத்தில் ஈடுபடுவது (“ஏல மோசடி” என்று அழைக்கப்படுகிறது) ஆகியவை சட்டவிரோதமானது.

ஆதலால், நாம் பின்வருவன குறித்து விவாதிக்கவோ, தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவோ அல்லது போட்டியாளர்களுடன் உடன்படவோ கூடாது:

- வாடிக்கையாளர்களுடன் விற்பனை சார்ந்து விலைகள் அல்லது மற்ற விதிமுறைகள்
- சப்ளையர்களிடமிருந்து விற்பனை சார்ந்து விலைகள் அல்லது மற்ற விதிமுறைகள்
- எந்த வாடிக்கையாளர்களுக்கு என்ன தயாரிப்புகள் வழங்கப்படவேண்டும்
- எந்த சப்ளையர்கள் பயன்படுத்தப்படுவார்கள் அல்லது குறிப்பிட்ட சப்ளையர்களிடமிருந்து என்ன தயாரிப்புகள் வாங்கப்படவேண்டும்
- சந்தைகளை உரிமைக் கொள்ளுதல், ஆதிக்கம் செலுத்துதல் அல்லது கட்டுப்படுத்துதல்
- வாடிக்கையாளர் அல்லது புவியியல் சந்தைக்காகப் பொருளை உற்பத்தி செய்வது, விற்பனை செய்வது அல்லது விநியோகிப்பதை நிறுத்துதல்

நம் நிறுவனத்திற்கு பொருந்தும் பல சர்வதேச சட்டங்கள் உள்ளன, அவை போட்டியாளர்களுடனும் மற்றும் பிற போட்டி எதிர்ப்பு வணிக நடவடிக்கைகள் சார்ந்தும் மேற்கொள்ளும் சில கலந்துரையாடல்களை சட்டவிரோதமாக்குகின்றன.



இந்தத் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி நம்முடன் ஒரு போட்டியாளர் பேச முயற்சித்தால் அல்லது வேறு ஏதேனும் போட்டி எதிர்ப்பு நடத்தைகளில் ஈடுபட நம்மை அழைத்தால், நாம் உடனடியாகச் சட்டத் துறை அல்லது இணக்க உடன்பாட்டுக் குழுவைத் தொடர்பு கொள்ள வேண்டும். போட்டி எதிர்ப்பு நடத்தை நம் நிறுவனத்திற்கு சிக்கலை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு குற்றவியல் தண்டனைகளையும் மற்றும் நம் வணிகத்தின் நற்பெயருக்குத் தீங்கும் விளைவிக்கும். வர்த்தகக் காட்சிகள் அல்லது கூட்டங்கள் போன்ற கேள்விக்குரிய நடத்தைக்கு வழிவகுக்கும் சூழ்நிலைகளைப் பற்றி கவனத்தில் கொள்ளுங்கள் மற்றும் ஏதேனும் கவலைகள் இருந்தால் கேள்விகளைக் கேளுங்கள்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **பொறுப்பாண்மைக்கு எதிரான கொள்கையைப்** பாருங்கள்.

## கேள்வி & பதில்

கே: காட்யா ஒரு வர்த்தகக் கண்காட்சியின் மதிய உணவில் பங்கேற்கிறார், அவர் ஒரு போட்டியாளருடைய ஊழியரான டீன் அருகில் அமர்ந்திருக்கிறார். Ball ஏதேனும் புதிய தயாரிப்புகள் வர உள்ளதா என்று டீன் காட்யாவிடம் கேட்கிறார், மேலும் தனது நிறுவனம் Ball உடன் போட்டியிடும் புதிய தயாரிப்புகளை வெளியிடப் போவதாக வெளிப்படுத்துகிறார். காட்யா டீனுடன் எதைப் பற்றியும் விவாதிப்பதை மறுத்துவிட்டு வெளியேறுகிறார். அவர் Ball குறித்த எந்தத் தகவலையும் வெளியிடாமல் உடனடியாக வெளியேறினார் என்றாலும், இந்தச் சம்பவத்தை அவர் தெரிவிக்க வேண்டுமா?

*ப: ஆம். டீன் காட்யாவுக்கு தகவலை வெளிப்படுத்தி இருக்கிறார், மேலும் அவர் Ball-இன் தயாரிப்பு உத்தியைப் பற்றி அறிய தவறான முறையில் முயற்சித்திருப்பதாகத் தெரிகிறது. காட்யா உடனடியாக இணக்க உடன்பாட்டுக் குழு அல்லது சட்டத் துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும்.*

### தெரிந்துகொள்வது நல்லது

*விலையிடல், செலவுகள், விற்பனை விதிமுறைகள் அல்லது நிபந்தனைகள், சந்தைப் பிரிவுகள், வாடிக்கையாளர்கள் அல்லது சந்தைப்படுத்தல் உத்திகள் போன்ற தலைப்புகளைப் பற்றி போட்டியாளர்களுடன் (அல்லது சாத்தியமான போட்டியாளர்களுடன்) விவாதிக்கவோ அல்லது தகவல் பரிமாறவோ கூடாது. ஒரு விவாதம் போட்டி வாய்ந்த ஒரு விஷயமாக மாறினால், உரையாடலை நிறுத்திவிட்டு, சூழ்நிலையிலிருந்து தன்னைத்தானே விலக்கிக்கொண்டு, உடனடியாகச் அச் சம்பவம் குறித்து இணக்க உடன்பாட்டுக் குழு அல்லது சட்டத் துறைக்கு தெரிவிக்கவும்.*

## நியாயமாகக் கையாளுதல் மற்றும் சந்தைப்படுத்தல் நடைமுறைகள்

போட்டியாளர்கள் மற்றும் சப்ளையர்கள் பற்றிய தகவல்கள் மதிப்புமிக்க சொத்து ஆகும். நாம் நமது போட்டியாளர்கள் மற்றும் சப்ளையர்களின் உரிமைகளை மதிக்கிறோம் மற்றும் எப்போதும் அவர்களிடம் நியாயமாக நடந்து கொள்வோம். நெறியற்ற வணிக நடைமுறைகள் மூலமாக இல்லாமல், நமது தயாரிப்பின் தரம் மூலமாகச சிறப்பாகப் போட்டியிட நாம் பாடுபடுகிறோம்.

Ball-க்காக வணிகத்தை நடத்தும்போது, நாம் நேர்மையான மற்றும் நியாயமான நடத்தைகளில் ஈடுபடுவதை உறுதி செய்ய வேண்டும். நமது போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது போட்டியாளர்களைப் பற்றிய இழிவான அல்லது பொய்யான அறிக்கைகளை வெளியிடுவது மற்றும் நம் தயாரிப்புகளைப் பற்றி தவறான அல்லது நியாயமற்ற அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும். இந்த நடைமுறைகளை மீறுவது Ball மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் சிவில் அல்லது குற்றவியல் பொறுப்பேற்க வழிவகுக்கும்.

## தயாரிப்பின் தரம்

நமது வெவ்வேறு பிரிவுகள் அனைத்திலும், நமது நீண்டகால வெற்றியானது உயர்ந்த தரமான தயாரிப்புகளை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஊழியர்களாக, நாம் நமது விநியோகங்களில் நிலைத்தன்மையையும் தரத்தையும் உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறோம். நமது தொழிற்சாலைகள், ஆய்வகங்கள் அல்லது அலுவலக இடங்கள் என எதுவாக இருந்தாலும், Ball-இன் தரத்திற்கு ஏற்றதாக இல்லாத எதையும் கண்டால், நாம் நம் மேலாளர் அல்லது இணக்க உடன்பாட்டுக் குழுவைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

நாம் நமது போட்டியாளர்கள் மற்றும் சப்ளையர்களின் உரிமைகளை மதிக்கிறோம் மற்றும் எப்போதும் அவர்களிடம் நியாயமாக நடந்து கொள்வோம்.




# நம் சமூகங்களை ஆதரித்தல்

## சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

நம் நிறுவனத்தின் வசதிகள் நம் கார்ப்பரேட் சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் பொருந்தும் அனைத்து சட்டத் தேவைகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க நிர்வகிக்கப்பட்டு இயக்கப்படுகின்றன. ஒவ்வொரு இயக்க அல்லது வணிக அலகும் அதன் செயல்பாடுகளுக்கு பொருத்தமான சுற்றுச்சூழல் மேலாண்மை முறையைப் பராமரிக்கின்றன மற்றும் இந்த அமைப்புகளின் கீழ் நமக்குள்ள பொறுப்புகள் குறித்து நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும். நமது நிறுவனம் சுற்றுச்சூழல் பொறுப்பிற்கு முன்னிலை வகிக்கவும் தற்போதுள்ள மற்றும் எதிர்கால சுற்றுச்சூழல் ஆபத்தைக் குறைக்கவும் முயலுகிறது.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **சுற்றுச்சூழல் இணக்கக் கொள்கையை** பாருங்கள்.

நமது நிறுவனம் சுற்றுச்சூழல் பொறுப்பிற்கு முன்னிலை வகிக்க முயலுகிறது.

# சமூகத்துடன் ஈடுபடுதல்


## நிலைத்தன்மை

நிலைத்தன்மை என்பது ஒரு உலகளாவிய நிறுவனமாக நாம் ஒவ்வொரு நாளும் செய்யும் விஷயங்களைப் பற்றியும் மற்றும் நமது செயல்கள் நம்மைச் சுற்றியுள்ள உலகுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதைப் பற்றியும் சிந்திக்கும் ஒரு முறைப்படியான வழியாகும். நாம் முடிவெடுப்பதில் மற்றும் செயல்பாடுகளில் பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கங்களை சமநிலைப்படுத்தி, நம் நிறுவனம் மற்றும் நம் பங்குதாரர்களுக்கு நீண்டகால, பகிரப்பட்ட மதிப்பை உருவாக்குகிறோம்.

பல ஆண்டுகளாக நாம் நமது பேக்கேஜிங் தயாரிப்புகளில் மூலப்பொருட்களின் அளவைக் குறைத்துள்ளோம், ஆற்றல் திறனை அதிகரித்துள்ளோம், பாதுகாப்புச் செயல்திறனை மேம்படுத்தியுள்ளோம், பேக்கேஜிங் மறுசுழற்சித் திட்டங்களை ஆதரித்துள்ளோம், தொண்டு நிறுவனங்களுக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளோம் மற்றும் நாம் வாழும் மற்றும் பணிபுரியும் சமூகங்களில் முதலீடு செய்துள்ளோம். இன்று, தயாரிப்பு மேற்பார்வைப் பொறுப்பு, இயக்கச் சிறப்பு, திறமை மேலாண்மை மற்றும் சமூகத் தூதர்கள் உள்ளிட்ட முக்கிய முன்னுரிமைப் பிரிவுகளில் நாம் நமது நிலைத்தன்மையின் முயற்சிகளில் கவனம் செலுத்துகிறோம். நமது செயல்பாடுகளில், நாம் பாதுகாப்பு, மின்சாரம், எரிவாயு, நீர், கழிவு மற்றும் எளிதில் ஆவியாகும் கரிமச் சேர்மங்கள் (VOCகள்) என்ற பெரிய 6-இல் கவனம் செலுத்துகிறோம்.

நிறுவனத்தின் இரு வருடத்திற்கு ஒருமுறையான நிலைத்தன்மை அறிக்கை நமது நிலைத்தன்மையின் மூலோபாயம், கடந்தகால செயல்திறன் மற்றும் எதிர்கால இலக்குகளை விவரிக்கிறது. நிலைத்தன்மைக்கான Ball-இன் உறுதிப்பாடு பற்றி மேலும் அறிய, www.ball.com/sustainability ஐப் பார்வையிடவும். அனைத்து ஊழியர்களும் நமது நிலைத்தன்மையின் குறிக்கோள்களைப் புரிந்து செயல்பட வேண்டும். திறன்மிக்க உபகரணங்களை நிறுவுவது போன்ற பெரிய செயல்களின் மூலமாகவோ அல்லது தன்னார்வம், மறுசுழற்சியை ஊக்குவித்தல் அல்லது விளக்குகளை அணைப்பது போன்ற சிறிய தனிப்பட்ட செயல்களின் மூலமாகவோ, நாம் அனைவரும் இங்கே Ball-இல் நிலைத்தன்மையின் மனநிலையை உருவாக்க முடியும்.

நாம் நமது நிலைத்தன்மை முயற்சிகளாக ஆறு கார்ப்பரேட் நிலைத்தன்மை முன்னுரிமைகள் மீது கவனம் செலுத்துகிறோம். அவையாவன: புதுமை, செயல்பாடுகள், திறன் மேலாண்மை, மறுசுழற்சி, விநியோகச் சங்கிலி மற்றும் சமூகம்.



## தொண்டு நிறுவனங்கள்

நம் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து நாம் வாழும் மற்றும் செயல்படும் சமூகங்கள் சார்ந்து நமது அர்ப்பணிப்பு Ball-இன் கார்ப்பரேட் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கிறது. Ball நிதியுதவி அளிக்கும் தொண்டு நன்கொடைகள் மற்றும் பிற காரணங்கள் மூலம் நிலையான வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் மற்றும் சமுதாயத் தொண்டு மற்றும் தன்னார்வத்தை ஊக்குவிக்கும் நிறுவனங்கள், திட்டங்கள் மற்றும் குடிமக்களுக்குத் தகுந்த முயற்சிகளை நாம் ஆதரிக்கிறோம். நமது தன்னார்வத் தொண்டு, நன்கொடைகள் மற்றும் சமூகத்தின் மீது கொண்டுள்ள ஈடுபாடு ஆகியவை நமது விதிகள், நமது கொள்கைகள் மற்றும் சட்டத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும், உதாரணமாக, நமது நன்கொடைகள் ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் அல்லது பொருந்தும் பிற தரநிலைகள் மற்றும் விதிகளை மீறாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **பொருந்தும் பரிசுகள் மற்றும் தன்னார்வக் கொள்கையை** பாருங்கள்.

## அரசியல் நடவடிக்கைகளில் பொறுப்புடன் பங்கேற்றல்

நாம் தேர்ந்தெடுக்கும் எந்தவொரு சட்டபூர்வமான வழியிலும் தனிநபர்களாக அரசியல் செயல்பாட்டில் பங்கேற்க நம்மை நம் நிறுவனம் ஊக்குவிக்கிறது. இருப்பினும், அரசியல் பிரச்சாரங்கள் சார்ந்து Ball-இன் பங்களிப்புகள் மிகவும் கட்டுப்படுத்தப்படுகின்றன. அரசியல் நோக்கங்களுக்காக சட்டத்தால் தடைசெய்யப்பட்ட அளவிற்கு கார்ப்பரேட் சொத்துக்களைப் பயன்படுத்துவதை நம் கொள்கை குறிப்பாகத் தடை செய்கிறது. Ball ஒரு அரசியல் செயற் குழுவை (BallPAC) உருவாக்கிப் பராமரித்து வருகிறது, இதன் மூலம் U.S. காங்கிரஸுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அது சட்டப்பூர்வமாகப் பங்களிக்கிறது.

மேலும் தகவலுக்கு BallConnect-இல் **ஊழியர்களின் அரசியல் பங்களிப்புகள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் கொள்கை** மற்றும் **வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் / உலகளாவிய ஊழல் எதிர்ப்பு கொள்கையைப்**பாருங்கள்.



## பொருளாதார மற்றும் வர்த்தகத் தடைகளுக்கு இணங்குதல்

நாம் பொருந்தும் அனைத்து வர்த்தகச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கக் கடமைப்பட்டுள்ளோம். அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் Ball வணிகம் மேற்கொள்ளும் மேலும் பல இடங்கள், பொருட்கள், மென்பொருள், தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பத் தரவுகளின் (மின்னணு முறையில் அனுப்பபட்டும் தரவு மற்றும் சேவைகள் உட்பட) இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை நிர்வகிக்கும் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் தடைகள், புறக்கணிப்புகள் மற்றும் பிற பொருளாதாரம் தொடர்பான விதிமுறைகளைக் கொண்டுள்ளன.

குறிப்பிட்ட நபர்கள், நிறுவனங்கள் மற்றும் நாடுகளுடன் Ball வியாபாரத்தில் ஈடுபடுவதை வியாபாரச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் தடை செய்கின்றன. இந்த வியாபாரச் சட்டங்களை மீறுவது Ball மற்றும் அதற்குப் பொறுப்பான ஊழியர்களுக்கு எதிராக குறிப்பிடத்தக்க நிதி மற்றும் குற்றவியல் அபராதங்கள் விதிக்கப்பட வழிவகுக்கும். Ball-இன் பொருளாதார மற்றும் வியாபார ஒப்புதல்கள் கொள்கையுடன் இணங்கத் தவறுவது ஊழியரின் மதிப்பீட்டை பாதிக்கும் மற்றும் வேலையில் இருந்து விலக்கப்படுதல் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.


இந்தச் சட்டங்களும் விதிமுறைகளும் சிக்கலானவை மற்றும் அவ்வப்போது மாறும் தன்மை கொண்டவை. மேலும் தகவலுக்கு BallConnect-இல் **ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இணக்கக் கொள்கை** மற்றும் **பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்புதல்களுடன் இணங்குதல் கொள்கையைப்** பாருங்கள்.

## பண மோசடியைத் தவிர்த்தல்

பணமோசடியைத் தடைசெய்யும் அனைத்து பொருந்தும் சட்டத் தேவைகளுக்கும் நம் நிறுவனம் இணங்குகிறது. "பணமோசடி" என்பது நபர்கள் அல்லது குழுக்கள் சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலம் பெற்ற வருமானத்தை மறைக்க முயற்சிக்கும் அல்லது அவர்களது சட்டவிரோத நிதிகளின் ஆதாரங்களை முறையானதாகக் காட்ட முயற்சிக்கும் ஒரு செயல்முறையாகும்.

அசாதாரணமான அல்லது சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகள் என்று வரும்போது நாம் முன்னெச்சரிக்கையோடு இருக்க வேண்டும். நமது துறையில் பணமோசடிச் செயல்களுக்கு அதிக வாய்ப்புள்ள மற்றும் அதிகக் கண்காணிப்பு தேவைப்படும் பரிவர்த்தனைகள் மற்றும் செயல்பாடுகளின் வகைகளை நாம் அறிந்திருக்க வேண்டும். இதுபோன்ற ஏதேனும் செயல்பாடு அல்லது பரிவர்த்தனையை நாம் கண்டால் அல்லது சந்தேகித்தால், உடனடியாக நமது மேலாளர் அல்லது இணக்க உடன்பாட்டுக் குழுவைத் தொடர்பு கொள்ள வேண்டும்.





## வணிக நுண்ணறிவை நியாயமான முறையில் உருவாக்குதல்

சந்தையிடத்தைப் பற்றி புரிந்து கொள்ளவும், தொழில்நுட்பம் மற்றும் வணிக மாற்றங்களை எதிர்பார்ப்பதற்கும், போட்டியின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கும் நமது நிறுவனம் திட்டங்களையும் உத்திகளையும் உருவாக்குகிறது.

போட்டியாளர்கள் மற்றும் அவர்களது பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய பொதுவாகக் கிடைக்கும் தகவல்களைப் பெறுவது முற்றிலும் சரியானது மற்றும் நம் தொழில்துறையில் வழக்கமாக நடைமுறையில் இருப்பது என்றாலும், அதைப் பெறும் செயல்முறை சட்டபூர்வமாகவும் நெறிமுறை சார்ந்ததாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக, ஏதேனும் சப்ளையர், வாடிக்கையாளர், போட்டியாளர் அல்லது வணிகக் கூட்டாளருக்கு சொந்தமான ரகசிய IP-ஐ நாடுவது அல்லது பயன்படுத்துவது தடைசெய்யப்படுகிறது. கூடுதலாக, நாம் ஒருபோதும் நமது போட்டியாளர்களைப் பற்றி இழிவான கருத்துக்களைப் பரப்பக்கூடாது அல்லது போட்டியாளரின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கும் நம்முடையவற்றிற்கும் இடையில் நியாயமற்ற ஒப்பீடுகளைச் செய்யக்கூடாது.

எப்போதாவது, நாம் ஒரு போட்டியாளர் அல்லது மற்ற நிறுவனத்தின் ரகசிய தகவல்களுக்கான அணுகலைக் கொண்டிருக்கலாம் அல்லது அதற்கான அணுகல் நமக்கு வழங்கப்பட்டிருக்கலாம். அத்தகைய தகவலை வெளியிட போட்டியாளர் அல்லது மற்ற நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது என்பது தெளிவாகத் தெரியும் வரையில், நாம் அதைப் பெறாமல் நிராகரிக்க வேண்டும் அல்லது பெறப்பட்ட எந்தப் பொருளையும் திருப்பித் தர வேண்டும், மேலும் நாம் எந்த நகல்களை உருவாக்கவோதோ வைத்திருப்பதோ கூடாது. Ball-இன் ரகசியத் தகவல்களை அணுக நேர்ந்தால், மற்றவர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென நாம் விரும்புகிறோமோ அதே மரியாதையுடன் ஒரு போட்டியாளர் அல்லது பிற நிறுவனத்தைப் பற்றிய தகவல்களைக் கருத வேண்டும்.

## உரிமை விட்டுக் கொடுப்புகளை வெளிப்படுத்தல்

விதியின் எந்தப் பிரிவையும் விட்டுக்கொடுப்பது நம் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவால் அல்லது இயக்குநர்கள் குழுவால் நியமிக்கப்பட்ட பொருத்தமான குழுவால் முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு நிர்வாக அதிகாரி அல்லது இயக்குநருக்கென இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின் எந்தவொரு உரிமை விட்டுக் கொடுப்பும் பங்குதாரர்களுக்கு உடனடியாகவும் மற்றும் பகிரங்கமாகவும் வெளியிடப்பட வேண்டும்.

சந்தையிடத்தைப் பற்றி புரிந்து கொள்ளவும், தொழில்நுட்பம் மற்றும் வணிக மாற்றங்களை எதிர்பார்ப்பதற்கும், போட்டியின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கும் நமது நிறுவனம் திட்டங்களையும் உத்திகளையும் உருவாக்குகிறது

# கூடுதல் வளங்கள்

பல சமயங்களில், உங்கள் மேலாளர் அல்லது மனிதவளங்கள் துறை பிரதிநிதி உங்களுக்கு இருக்கும் கேள்விகள் அல்லது கவலைகளுக்கு உதவ அல்லது சரியான திசையில் வழிகாட்ட ஒரு நல்ல வளமாக இருப்பார்.

## இணக்க உடன்பாட்டுக் குழு

இந்த நடத்தை விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அல்லது வேறு ஏதேனும் நெறிமுறைகள் அல்லது இணக்கம் சம்பந்தமானப் பிரச்சனைகள் தொடர்பான கேள்விகளைக் கேட்க அல்லது புகாரளிக்க, இணக்க உடன்பாட்டுக் குழு அல்லது உங்கள் பகுதி இணக்க மையப் புள்ளியைத் தொடர்பு கொள்ளுங்கள்.
compliancealliance@ball.com

## இணக்க உடன்பாட்டுக் குழு ஹாட்லைன்

இணக்கம் சார்ந்த உங்களது கவலைகளைத் தெரிவிக்க, ballcompliancehotline.com-க்கு செல்லவும் அல்லது கட்டணமில்லா உள்ளூர் இணக்க உடன்பாட்டுக் குழு ஹாட்லைன் எண்ணை அழைக்கவும். புகாரளித்தல் சேவை ஒரு சுயாதீனமான மூன்றாம் தரப்பினரால் இயக்கப்படுகிறது மற்றும் இது நாளின் 24 மணி நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் கிடைக்கிறது.

## சட்டத் துறை

கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கும் கவலைகளுக்கு மறுமொழி கூறுவதற்கும் சட்டத் துறையில் பிராந்தியம் மற்றும் பிரிவு அளவில் வல்லுனர்கள் உள்ளார்கள். உங்களுக்கு சட்டம், ஆர்வ முரண்பாடு அல்லது நெறிமுறை குறித்த கவலைகள் இருந்தால், நீங்கள் நமது வழக்கறிஞர்களில் ஒருவரைத் தொடர்பு கொள்ளலாம்.

## உள் தணிக்கை

உள் கணக்கு வைப்புக் கட்டுப்பாடுகள் அல்லது தணிக்கை விஷயங்கள் தொடர்பான கேள்விகள் அல்லது கவலைகளை உள் தணிக்கைக் குழு கவனத்தில் கொள்ளும்.
InternalAudit@ball.com

## இணக்க ஹாட்லைன்ஸ்

| | |
|---|---|
| **அமெரிக்கா** | |
| கார்ப்பரேட் / பேக்கேஜிங் | 1-800-270-2879 |
| ஏரோஸ்பேஸ் | 1-303-939-6777 அல்லது ethicshotline@ball.com |
| **அர்ஜென்டினா** | 800-666-1246 |
| **ஆஸ்திரியா** | 0800-802298 |
| **பிரேசில்** | 0-800-020-3400 |
| **கனடா** | 1-800-269-8163 |
| **சிலி** | 800-914-313 |
| **செக் குடியரசு** | 800-810-915 |
| **டென்மார்க்** | 8082-0147 |
| **எகிப்து** | 0800-000-9377 |
| **பின்லாந்து** | 0800-07-636 |
| **பிரான்சு** | 0805-080245 |
| **ஜெர்மனி** | 0800-180-0602 |
| **இந்தியா** | 000-800-100-3774 |
| **அயர்லாந்து** | 1-800-904-178 |
| **இத்தாலி** | 800-788-058 |
| **மெக்சிகோ** | 01-800-681-6521 |
| **மியான்மர்** | 720-904-6581 |
| **நெதர்லாந்து** | 0-800-022-1241 |
| **பராகுவே** | 009-800-542-0162 |
| **போலந்து** | 48-22292267 |
| **ரஷ்யா** | 8-800-100-6294 |
| **சவுதி அரேபியா** | |
| (உள்ளூர் லேண்ட்லைன்) | 008111000237 |
| (சர்வதேச-மொபைல் / லேண்ட்லைன்) | +966-8111000237 |
| **செர்பியா** | 0800-190-162 |
| **ஸ்பெயின்** | 900-839195 |
| **ஸ்வீடன்** | 020-888-506 |
| **ஸ்விட்சர்லாந்து** | 0800-321-013 |
| **துருக்கி** | 90-850-3902143 |
| **ஐக்கிய ராஜ்ஜியம்** | 0-808-189-1083 |
| **வியட்நாம்** | 84-444-583357 |

வணிக நெறிமுறை நடத்தை விதிகள்
2020-இல் திருத்தப்பட்டது; அனைத்துப் புகைப்படங்களும் மார்ச் 2020-க்கு முன் எடுக்கப்பட்டது

Ball Corporation
9200 W. 108th Circle
Broomfield, CO 80021